உ

# அருள் ஒளி



133

**அன்னை சிவத்தமிழ்ச்செல்வி அம்மையாரின்**
**பத்தாவது குருபூசை - 24-06-2018**

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை.
2018

உலகம் போற்றும் ஆன்மீக அன்னை
பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்களின்

# பத்தாவது குருபூசை வழிபாடு



தவப்பேறு
07-01-1925

சிவப்பேறு
15-06-2008

குருபூசை நாள் - ஆனி விசாகம்

## உமைப்போல் ஒருவர் உண்டோ மனமே
## எமக்கு உற்றவரே

நிர்வாக சபை,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

உ

# அருள் ஒளி

( மாதாந்த சஞ்சிகை )

ஆசிரியர்
கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்
உதவி ஆசிரியர்
திரு. சு. ஏழூர்நாயகம் அவர்கள்
ஆனி மாத மலர்
2018

வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.





e-mail : thurkaiammantemple@gmail.com
face book : tellidurga@gmail.com



பதிவு இல.: ISSN 2362 - 0587
ISBN 978 - 955 - 23 - 0019-3


## அன்னை சிவத்தமிழ்ச்செல்வி அவர்களின் ஆளுமைமிக்க தலைமைத்துவம்

சொல்லாலும் செயலாலும் ஒருமித்துச் செயற்பட்ட ஒப்பற்ற தலைமகள் சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அன்னை இறைபதமடைந்து 10 ஆண்டுகள் பூர்த்தியாகிவிட்டது. ஈழத்திருநாட்டில் தன்னிகரில்லாத் தலைமகளாக விளங்கியவர் அம்மையார் அவர்கள். கணீரென்ற குரலில் சொற்பொழிவாற்றி பல ஆயிரம் மக்களை ஆற்றுப்படுத்தியவர் அவர். புராண, இதிகாசங்களையும், சைவசித்தாந்த தத்துவங்களையும் முறையாகக் கற்று எளிமையாக மக்களுக்கு எடுத்துரைத்தவர். ஈழத்தில் மட்டுமன்றி, இந்திய அறிஞர் மட்டத்தில் பெருமையாக அறியப்பட்டவர் இவர். சென்னை சைவசித்தாந்த சமாசத்தின் உன்னத மாநாட்டுக்குச் சென்று தலைமை தாங்கி எம்மண்ணிற்குப் பெருமை சேர்த்தவர். ஈழத்து பேச்சுலக வரலாற்றில் நாவலர் பெருமானுக்குப் பின் முத்திரை பதித்தவர் இவர் என்றால் மிகையாகாது.

தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோவிலை தேசம் போற்றும் நிலைக்கு மாற்றியமைத்த அம்மையாரின் பணியை யாரும் மறந்துவிடமுடியாது. ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணவேண்டுமென்ற மகுட வாசகத்தோடு அம்மையார் ஆரம்பித்த துர்க்காபுரம் மகளிர் இல்லம் 36 வருடங்களைக் கடந்து அவரின் கனவை நனவாக்கி வருகிறது. இறைபணி என்பது வழிபாடு மட்டுமல்ல, வாழ்விற்கு

ஆதாரமின்றி தவிப்பவர்களுக்கு உதவுவதும் என்ற குறிக்கோளை இம்மண்ணில் பிரகாசிக்கச் செய்தவர் அம்மையார். தன் வாழ்நாள் முழுவதையும் சமூகத்திற்காக அர்ப்பணித்து தன் உயிர் பிரியும்வரை உத்தம காரியங்களைச் செய்த அம்மையாரை சைவஉலகம் எளிதில் மறந்துவிடமுடியாது.

அம்மையாரின் வாழ்வு அனைவருக்கும் ஓர் சிறந்த பாடமாகும். அன்னையின் பிரிவினால் உலகமே கலங்கியது. அவர் ஆற்றுப்படுத்திய அடியவர்கள், இல்லப்பிள்ளைகள் கதறியழுது வழியனுப்பிய நாள் நெஞ்சங்களை விட்டு நீங்காது. உள்ளத்தை உருக்கிய நாள் பறந்தோடிவிட்டது. எனினும் அம்மையாரின் நினைவுகள் அவரை அறிந்தவர்கள் அகத்திலிருந்து என்றும் மறக்கஇயலாது. காலங்கள் சென்றாலும் கலங்கரை விளக்காக விளங்கிய அன்னையின் ஆசிகள் என்றும் எமக்கு வேண்டும்.

– ஆசிரியர்


## சிவபூமி கண்தான சபை

தானங்களில் சிறந்த தானமாக கண் தானத்தைச் செய்ய முன் வாருங்கள். உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்றிருக்கும் ஒருவருக்கு ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே இப்புண்ணிய காரியத்திற்கு ஒப்புதல் தாருங்கள்.

**தொடர்புகளுக்கு**

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
**021 - 222 6550**

கண் வைத்திய நிபுணர்
**Dr. ச. குகதாசன்**
**021 - 222 3645**

# சைவம் தந்த சிவத்தமிழ்ச்செல்வி

முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்

சிவபெருமானை முழுமுதற்கடவுளாகக் கொண்டது சைவசமயம். இறைவன் என சிவனைப் போற்றி வணங்கியவர் காரைக்காலம்மையார். அவர் இறைவனை இயற்கை வடிவிலே கண்டவர். அக்காட்சியை எல்லோரும் என்றும் கண்டு மகிழப் பாடல்களிலே சொல்லோவியமாக வரைந்து வைத்தவர். தமது முன்னோர் வழிபாட்டு மரபைப் பேணி அதைப் பின்னோர் அறிய வைத்தவர்.

அவரை அடுத்து திலகவதியார் சைவசமயத்தை ஒரு சிறந்த வாழ்வியல் நடைமுறையாகப் பேண வழிகாட்டினார். மனித வாழ்க்கையில் இடர்கள் வரும்போது அவற்றைக் களைய கோவில் வழிபாடே உறுதுணையாகுமென உணர்த்தியவர். துன்பத்தால் துவண்டு சைவவழிபாட்டைத் துறந்து பிற சமயங்களைத் தழுவுவோரை நெறிப்படுத்தியவர் திலகவதியார் எனில் மிகையாகாது. தனது தம்பி நாவுக்கரசனை அவ்வாறு மீட்டு வந்து மீண்டும் சைவவாழ்வியலைத் தொடரச்செய்தவர். காரைக்காலம்மையார் பாடிய தேவாரப்பாடல் மரபை நாவுக்கரசரும் பாடித் தொண்டு செய்ய வைத்தவர்.

திலகவதியாருடைய நெறிப்படுத்தலைச் சிறப்பாக மேற்கொண்டவர் ஈழத்துச் சைவமரபிலே தோன்றிய செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி. தமிழாசிரியராகப் பணிசெய்யும் போது சமய நெறியைக் கற்பிப்பதோடு மட்டும் நின்று விடாது அதை வாழ்வியலோடு இணைக்கவேண்டி பணி செய்தவர். இல்லறம் துறந்து திருக்கோயில் பணியிலே முழுமையாக ஈடுபட்டவர். இலுப்பை மரங்களின் இடையே இருந்த துர்க்கையம்மனுக்கு பெருங்கோயில் கட்டி எல்லோரும் அவளை நேரில் வழிபட வகை செய்தவர். திருக்கோயில் பணியில் திளைத்திருப்பதேநிறைவான சைவவாழ்வியல் என்பதை எல்லோருக்கும் உணர்த்தியவர். துன்பத்தால் நலிந்து துணையின்றி அல்லற்பட்ட பெண்களுக்குத் தெல்லிப்பழை துர்க்காபுரம் ஆறுதல் தரும் வாழிடமாக அமையப் பெருமுயற்சி செய்தவர்.

திருக்கோயில் வழிபாட்டில் பெண்களின் பங்கைச் சிறப்பாகத் திட்டமிட்டுச் செயலாற்றியவர். திருக்கோயிலின் பணிகளுக்குப் பொறுப்பாகத் தலைமைத்துவத்தை ஏறக்குறைய நாற்பது ஆண்டுகள் அவர் செய்த பணி சைவசமய வரலாற்றில் அன்னை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியாக துர்க்கா துரந்தரியாகப் பதிவு செய்ய வழிசமைத்தது. ஆணின் துறவு வாழ்க்கை தன்னலமானது.

ஆனால், பெண்ணின் துறவு அவள் எல்லோருக்கும் அன்னையாக, உற்ற துணையாக உடனிருக்கவல்லது என்பதை உலகம்அறியவைத்தவர் சிவத்தமிழ்ச்செல்வி.

ஈழத்தில் மட்டும் முடங்கியிருக்காமல் மலேசியா, இந்தியா, சிங்கப்பூர், பிரித்தானியா போன்ற பிற நாடுகளுக்கும் சென்று துர்க்கை அம்மன் திருக்கோயில் பணிகளுக்கான பொருட்கொடையைப் பெற்றவர்.

அவரது இனிய குரலால் ஆற்று ஒழுக்குப் போன்ற பேச்சால் எல்லோரையும் சைவ வழிபாட்டில் மனங்கொள்ளச் செய்தவர். ஈழத்துத் திருக்கோயில்களில் அவரோடு இணைந்து சமயச் சொற்பொழிவு ஆற்றும் வாய்ப்பு இற்றைக்கு 45 ஆண்டுகளுக்கு முன்னரேயே எனக்குக் கிடைத்தது. அப்பணி இன்றுவரை தொடர வழிகாட்டி நிற்கிறது.

அன்னை சிவத்தமிழ்ச்செல்வியின் தொலைநோக்கான சமயப்பணிகளிலே இன்றியமையாதது பெண்களின் இல்லமாகும். காலத்தின் கோலத்தாலும் இயற்கையின் சீற்றத்தாலும் உறவுகளையும் பெற்றோரையும் பிரிந்த பெண் குழந்தைகள் வாழ்வுக்கு வழிகாட்டத் துர்க்காபுரம் மகளிர் இல்லத்தை அமைத்துத் திறம்பட நடத்தினார். அவர் அக்குழந்தைகளின் அன்னையாக இருந்து வாழ்ந்த வாழ்வு மனித விழுமியப் பண்பாட்டின் ஓர் அடையாளமாக உள்ளது.

எதிர்காலத்திலும், தான் செய்த சைவப்பணி சிறப்பாகத் தொடரவேண்டும் என எண்ணிச் செயற்பட்டவர். இன்று துர்க்காபுரம் தருமபரிபாலன சபைத்தலைவராக இருந்து அறப்பணி செய்யும் ஆறு.திருமுருகனை உருவாக்கியவர் சிவத்தமிழ்ச்செல்வியே. 14 ஆண்டுகள் அவரிடம் சைவப்பணியாற்றும் பயிற்சியைப் பெற்ற ஆறு.திருமுருகன் அவர் வழிநின்று அரிய பணி செய்கிறார். எல்லா நாடுகளுக்கும்சிவத்தமிழ்ச் செல்வியைப்போல சென்று சமயச்சொற்பொழிவு செய்து அறப்பணிகளுக்கான பொருளீட்டி வருகிறார். அவர் இல்லறம் துறந்த நம்பியாக இருப்பதும் இதற்கு வாய்ப்பாக உள்ளது. சைவசமய வரலாற்றில் பெரிய புராணம் காரைக்காலம்மையாரையும் திலகவதியாரையும் பதிவு செய்து வைத்துள்ளது. எங்கள் அன்னை சிவத்தமிழ்ச்செல்வியின் சைவவாழ்வியல் வரலாறு விரிவாக எழுதப்பட்டு நூலாக வெளிவர வேண்டும்.

நாம் அவர் காலத்திலே அவரோடு வாழ்ந்து பெருமை பெற்றோம். எமது தலைமுறையினர் அவர் வரலாற்றைப்படித்து அவரது நீங்கா நினைவுகளோடு சைவ வாழ்வியல் வாழவேண்டும். இது காலத்தின் குரலாகும்.

**நன்றி – வலம்புரி**

# அகிலமனைத்திற்கும் அருளைச் சொரியும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்

பேராசிரியர் டாக்டர் கனகசபாபதி நாகேஸ்வரன்
(பரம்பரை அறங்காவலர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு)

அம்பிகையின் அருள்வீச்சு இன்று உலகளாவிய நிலையிலே ஆன்மவர்க்கத்தினரை ஈர்த்துள்ளமையினை அறியமுடிகிறத. மணிவல்லபம் எனும் நயினையிலே வரலாற்றுக் காலத்திற்கு முன்னரேயே நிலவிய நாகவழிபாட்டின்மகோன்னதமான அம்சங்கள் இன்று ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்திலும் அதனைச் சூழவுள்ள பின்னணிகளிலும் செறிவாகவே நிலவுவதனைத் தரிசிக்கமுடியும். மிகவும் நம்பிக்கையுடன் பக்திபூர்வமான இயற்கைச் சூழல் ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தினது மகிமை என்று கூறுவது மிகப்பொருந்துவதாகும். இங்கு உறையும் அம்பிகையின் கீர்த்தி மகிமை எல்லையற்றதாகும்.

சிவனும் உமையும் என்னும் சைவத்தத்துவத்தின் திருக்கோலம் நயினை அம்பிகையின் வடிவழகு. அதாவது சிவனும் உமையும் உடனுறையும் திவ்ய திருக்கோலமே நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளினது எழிற்கோலம். "வௌவிய பாகத்திறைவரும் நீயும் மகிழ்ந்திருக்குஞ் செவ்வி" என்று பேசுகிறார் இதன் அழகு நிலையை அபிராமிப்பட்டர். ஆகவே உலகினர்கள் எப்பொழுதும் விரும்புத் தாய்த்தெய்வ இலட்சணத்துடன், அழகு ஒழுகுஞ் சாக்த (காந்த) சொரூபியாக மிளிர்பவள் நயினை அம்பிகை என்பதே விளக்கமாகும். இத்தன்மையினை ஆலயத்திலே வந்து தினமும் அம்பாளை வழிபடுவோர் கண்டு கூறும்போது அவ்வம்பிகையின் உயிர்ப்புறு பேரருள் எம்மை மெய் சிலிர்க்க வைக்கிறது. எம்மை வளர்த்தெடுத்தவள் இந்தத் தாய். எழிற்பரை: பராபரை: அகிலாண்டநாயகி : ஜெகன்மாதா. உலகிலே "தாய்மை"யை விட மேலானதெதுவும் கிடையாது. இறைவனையும் தாயன்போடு உவமித்துத் "தாயிற் சிறந்த தயாவான தத்துவனே" என்று திருவாசகத்திலே மாணிக்கவாசக சுவாமிகள் அழைத்துள்ளார். அன்பு, இரக்கம், கருணை, பாசம், நேசம், அருள், பரோபகாரம், சீலம், தூய்மை, உதவி, அருமை, பெருமை, நலம், சிறப்பு அனைத்தையும் ஒரே நிலைநின்று அருளும் அற்புதம் தாய்மையிடமே குடி கொண்டுள்ளது. அதனாலேயே தாய்க்கடவுளான அம்பிகையிடத்திலே அடியார்கள் தூய பக்தியைச் சொரிகிறார்கள். இதன் மகத்துவத்தையே நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளிடத்திலேயும் தரிசனத்தின் மூலம் அனுபவிக்கிறோம்.

நயினை அம்பாள் நம்பிக்கைக்குரிய தெய்வம். இயற்கையினால் ஆட்கொள்ளப்பட்ட சக்தி. அனைத்து வல்லமைகளையும் கொண்ட தனித்துவமான ஆற்றலுள்ள பெருந்தெய்வம். நாகவழிபாட்டின் தொன்மங்களைத் தன்னுளடக்கிய

வரலாறு நாயகியாகவே நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் இலங்குகிறாள். மானுடசரிதவியல் வரலாறும், வழிபாட்டு வழிவரும் மரபும் தொடர்பறாத நிலையிலே பொருத்தமுறைப் பேணப்படும் மக்கள் நம்பிக்கை நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் வழிபாட்டு மரபில் இணைந்துள்ளமை காணத்தக்கது. பிறப்பு, பெயர், வளரும் தன்மை, இயல்பூக்கம், கல்வி, அறிவு, அனுபவம், அருள், மேம்பாடு, அற்புதம், ஆளுமை விருத்தி என்று ஒவ்வொரு மானுட வாழ்வியற் கூறுகளும் நயினை அம்பிகையின் தொடர்புடன் இயைந்து செல்வது இவ்வம்பாளின் தனி அழகு என்று சுட்டலாம். எல்லா வித்தைகளும், மேன்மைகளும் மகிமைகளும் தாயைத்தானே சென்று சேருகின்றன? இத்தத்துவமே நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளது அருள்வீச்சு என்று குறிப்பிடலாம். விஞ்ஞானத்தின் பரிபூரண விளக்கம் இங்கு நினைக்கப்படத்தக்கது. அதாவது கருவளம் முதல் இவ்வாறு தான் அமையும் என்ற முற்கூறல் நிலை நின்ற அத்தகைய பிரகடனங்களும் அம்பிகையின் ஞானதிருஷ்டியின் பிரவாகமே எனப் பொருந்தும்.

"தெய்வ சங்கற்பம்" என்று பெரியோர் கூறும் வார்த்தையைக் கேள்விப்படுகிறோமல்லவா? "திருவருள்" என்றும் கூறுகிறார்களல்லவா? "இறையருள்" என்று சொல்லுகிறார்களல்லவா? "அவளருள்." "அவனருள்" என்கிறார்களல்லவா? இவை எல்லாம் என்ன? என்ற வினா இப்பொழுது நமது சிந்தனையைக் கிளறி விடுகின்றன. "மறைபொருள்" அர்த்தங் கொண்ட இவற்றுக்கு எவருமே விளக்கம் தெளிவுறக் கொடுத்துவிட முடியாது. ஆயினும் ஒவ்வொரு மனிதருடைய வாழ்விலும் இந்தத் தெய்வ அருள் பாய்ந்து சிறந்து கொண்டே இருக்கின்றது. அதாவது இடையறாது பின் தொடர்ந்து ஆட்கொள்ளும் தன்மையினை "அம்பிகை" இயற்றிக் கொண்டேயிருக்கிறாள் என்பது உலகநடைமுறையிலே புரிகிறது. "புறம் புறம் திரிந்த செல்வமாகவே" அம்பாள் அருள் சுரந்தளிக்கிறாள்.

ஜீவாத்மாவும் பரமாத்மாவும் இணைபிரியாத உறவுடனே கலந்து நிற்கும் செயற்பாடு அம்பிகையின் உபாசனையினாற் கிடைக்கிறது. இதன் தாற்பரியத்தினை பாரதி, இராமகிருஷ்ண பரமஹம்சர், அபிராமிப்பட்டர், தாயுமானவர், அருளாளர்கள் எடுத்துரைத்துள்ளனர். என்றென்றும் ஞானிகளது உபதேசங்கள் அருள் தத்துவத்தினை மெய்ப்பித்தவண்ணமுள்ளன. இதன் எளிமையான நடைமுறையினை குடும்பக் குவலயமென இன்றும் நயினை அம்பாள் கோயிலிலே பிரத்யட்சமாகக் காணமுடியும். அடியவர், ஆண்டவன் இணைப்பிலே குடும்பமே மகிழ்வது கண்டின்புறற்பாலது. நேர்த்திகள், வேண்டுதல்கள், நாகப் பிரதிஷ்டை, நாகதோஷ நிவாரணம், நாகசாந்தி என்ற நடைமுறைகளினாலே குடும்பத்தின் நல்வாழ்வு உறுதி செய்யப்படுகிறது.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய முகப்பிலே அமைந்துள்ள வன்னி மரத்துடன் இணைந்த நாகதம்பிரான்வழிபாடு குறித்து இன்று வியப்பே

மேலிடுகிறது. கரும்பாம்பு, செம்பாம்புகளை ஒரு கிண்ணத்திலே பாலிலே இட்டு உள்வீதி வலம்வரும் அடியார்களது மெய்யுணர்ச்சி எழுத்திலே வடித்துவிட இயலாதது. மனத்திலே கொண்டுள்ள நேர்த்தியின் தேவை காரணமாக கரும்பாம்பு செம்பாம்பு சுற்றிவரும் கருமம் தினமும் அடியார்களால் நிகழ்த்தப்படுவது காணத்தக்கது. அடியவர்கள் யாரோ பிற அடியவர்கள்ால் அறிவுறுத்தப்பட்டு அம்பாளின் ஆலயத்திற்கு ஓடி வருகிறார்கள். வேற்றுச் சமயத்தினைச் சேர்ந்த பலர் இன்று நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்திலே வந்து தங்கி இத்தகு நேர்த்திகளை நிறைவேற்றிச் செல்கிறார்கள்.

எல்லோரதும் வேண்டுதல்களை ஈடேற்றும் சர்வ வல்லமை பொருந்திய தெய்வம் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் அத்தனை பேறுகளையும் அருளவல்ல சக்தி நயினை அம்பாள். உலக மக்களது வேண்டுதலிலே "சந்தானப் பேற்றினை" அருளவல்ல தெய்வமென மாதர்குலத்தினரால் மகிமையுடன் கொண்டாடப்படுந்தெய்வம் நயினை ஸ்ரீ நாகபூஷணி தங்கத்தினாற் செய்யப்பட்டனவும், மரத்தாற் செய்யப்பட்டனவுமான "தொட்டில்பிள்ளை" நேர்த்திப் பொருட்கள் நயினை அம்பாள் ஆலயத்திற்குக் கிடைப்பன போன்று பிற ஆலயங்களுக்குக் கிடைப்பதில்லை. இந்த அருளீர்ப்புக் கனவு மூலமும் நடைபெறுகிறது. ஆணடியார்கள் பலரைத் தொடர்பு கொண்டு வினவிய போது அவர்கள் பட்டவர்த்தனமாகவே "ஐயா, இரபு பாம்பாகவே காட்சியளித்தாள்" அதுதான் கோயிலில் நிற்கிறோம் என்றனர். இவ்வுணர்வனுபவம் ஏனைய திருத்தலங்களில் இல்லையென்று கூறுவதற்கில்லை. பெருமளவிலே நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையின் அருளாடலாலேயே அங்கு தினமும் இத்தகு அருள்வீச்சு நிகழ்கின்றது. இவ்விடத்தில் "இயங்கு சக்தி" யாகவே தொழிற்படும் சக்தி நயினை நாகபூஷணி அம்மன் என்பது பிரத்தியட்சம். மக்கள் மனங்களில் பற்றி நின்று தனது அருளாடலை நிகழ்த்தும் அற்புதம் அனுபவத்தின் பாடமாகவே அமைவது. உலக மக்கள் துயர், துன்பம், கஷ்டம், இன்னல், பஞ்சம், அலைச்சல், நோய், பகை என்று இவற்றால் இடருற்றபோதும் இவற்றிற்கும் பரிகாரம் கண்டு வழிபாட்டால் திருப்தி காணும் நிலையை நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் அருளுவது கண்கூடு.

அகிலமனைத்திற்கும் அருளைச் சொரியும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் உயர் திருவிழா ஜீன் மாதம் 14ஆம் திகதி கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகவுள்ளது. எல்லா உயிர்களும் பரிபூரண சுகத்துடன் வேண்டிய அனைத்துச் சுகங்களும் பெற்று வாழவேண்டும் எனப் பிரார்த்தித்து நிறைவு செய்கிறோம்.

# திருமுறைகளில் கிரியைகள் பற்றிய சில சிந்தனைகள்

அமரர் ஸ்ரீபதிசர்மா கிருஷ்ணானந்தசர்மா

இறைவழிபாட்டின் மூலம் மக்களை ஆன்ம ஈடேற்றம் அடைவதற்கு வழிகாட்டுகின்ற சனாதன தர்மமம் நமது இந்துமதம். காலந்தோறும் வேத சிவாகமங்களை முதனூலாகக் கொண்ட வைதிக மரபு திருமுறைகள் மெய்கண்ட சாஸ்திரங்கள் என்பவற்றினூடாக மேன்மையுற்று எமது ஆன்மீக வாழ்விற்கு உறுதுணை புரிந்து வந்துள்ளது.

யாம் இச்சரீரம் பெற்றது இறைவனை வணங்கி முத்தி இன்பம் பெறுதற் பொருட்டே என அறைகூவி எமது சமயத்தின் காவலனாக வாழ்ந்த நல்லை நகர் நாவலர் அவர்களும் பரமசிவன் அருளிச்செய்த வேத சிவாகமங்களை முதனூலாகக் கொண்ட திருமுறைகளிலும், சிவஞானபோதம் முதலிய நூல்களிலே பேசப்பட்டதுமான வைதிக சித்தாந்த சமயத்தை வளர்ப்பதற்கு பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

வேதாகமங்கள் பல்கிப் பெருகி இருப்பதினாலும் இவற்றைக் கற்றுத் தெளிந்து உணருவது சிரமமானதாலும் கருணைக் கடலாகிய சிவபிரான் நம்மீது கொண்ட பெருங் கருணையினால் மக்கள் ஓதி உணர்ந்து நற்கதி அடையும் பொருட்டு சமய குரவர்களையும் சந்தான குரவர்களையும் இப்புவியில் அவதரிக்கச் செய்து அவர்களின் வாயிலாகத் திருமுறைகளையும், மெய்கண்ட சாஸ்திரங்களையும் வேதாகம சாரமாக நமக்கு வழங்கி அருளியுள்ளார்கள். சிவபோகத்தை அடைவதற்கு உரியவழிகளாக சன்மார்க்க முறை, அன்புநெறி என இரு வழிகள் கூறப்படுகின்றன.

வேதநெறியாகிய வைதிகநெறி – சன்மார்க்கநெறி – அறிவுநெறி, சைவம் சிவநெறி – அன்புநெறி – அருள்நெறி, அறிவு நெறியாகிய வைதிகநெறி அருள்நெறியாகிய சைவத்திற்சென்று முற்றவேண்டும். சைவத்துறையை அடையாதவர்களுக்கு வீடு இல்லை. வேதநெறியிற் செல்லாதவர்கள் சைவத்துறையை அடையாதவர்கள் என்ற பண்டிதமணியின் கூற்றானது வைதிக சைவநெறியின் சிறப்பினை தெளிவாகப் புலப்படுத்திக் காட்டுகின்றது. “வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க” என்ற சேக்கிழாரது கூற்றும் இங்கு மனங்கொள்ளத்தக்கதாகும். சம்பந்தர் சுவாமிகள் “வேதமொடு சைவநெறி விளங்கவந்த கவுணியர்” எனச் சிறப்பிக்கப்படுகின்றார். அவர் இறைவனை “அன்பு நெறி பெருகுவித்த ஆண்டகையார்” எனப் போற்றுகிறார்.

இவ்விதம் அமைந்த நமது சமய வாழ்க்கையிலே வேள்வி, யாகம், தபம், தீர்த்தம், தோத்திரம், தியானம், விரதம், பூஜை, ஆராதனை என கிரியை மரபுகள் பலவாறு விரிந்து காணப்படுகின்றன. கிரியைகள் யாவற்றிற்கும் பக்தி அடிப்படையாக அமைகின்றது.

"அம்மையே அப்பா ஒப்பிலா மணியே"

"பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா" என இவ்விதமாக இறைவனை விளித்தழைக்கின்ற மரபு திருமுறைகளிலும் பலவாறு காணப்படுவதனை நாம் நோக்கலாம்.

வேத காலத்தில் வேட்பவன் "நான் உனக்கு நெய், பால், தேன் என்பனவற்றை ஆவியாகச் சொரிகின்றேன். நீ எனக்கு நீண்ட ஆயுளையும் வீரர்களான புத்திரர்களையும் பசு முதலிய செல்வங்களையும் தா" என வேண்டுகிறான். கிரியைகள் பலன்களை அவாவிப் செய்யப்படும் நிலையினை – அதாவது வேண்டிய விருப்பத்தை அடைவதற்கான – காமிகக் கிரியைகளைச் செய்யும் நிலையினை இது சுட்டுகின்றது. கிரியைகள் பற்றி விளக்குகின்ற ஆகமங்களும் துணை நூல்களும் கிரியைகளினால் ஏற்படும் பலன்களையும் விரிவாகச் செப்புகின்றன. இவற்றை நோக்கும்போது மக்களின் வழிவழி தொன்றுதொட்டு நிலவி வந்த சிந்தனைகள் இன்றும் வளர்ச்சி பெற்று நிலைத்து உள்ளதை நாம் உணரமுடிகின்றது. இறைவன் வேண்டுவார் வேண்டுவதை அருளுபவன் இதனையே "சஏவ பகவானீசக ஸர்வா பீஷ்டப்ரதாஸ்யதி" என மறைகளும், "வேண்டுவார் வேண்டுவதை ஈவான் கண்டாய்" என திருமுறைகளும் கூறுகின்றன.

தெய்வம் ஒன்றிற்கு பல பெயரிட்டு வழிபடும்முறை யசுர் வேதத்திலேயே காணப்படுகின்றன. சைவத்தின் தாரக மந்திரமான "ஓம் நமசிவாய" என்பது யசுர் வேதத்தில் காணப்படும் சதருத்திரியம் என்ற பகுதியிலே காணப்படுகின்றது.

ஒரு நாமம் ஓருருவம் இல்லாத பரம்பொருளுக்கு ஆயிரம் திருநாமம் செப்பி வழிபடும் இம்மரபு, இதிஹாஸ புராணங்களிலே சிறந்து கிரியைகளில் மேலும் வளர்ச்சி பெற்றுள்ளது.

"அந்தமில் குணத்தவர்கள் அர்ச்சனை
கள் செய்யவமர்கின்றவர்"

"நீற்றினை நிறையப்பூசி நித்தமாயிரும் பூக்கொண்டு தேவர்கள் லட்ஷ நாமங்கள் கூறி அர்ச்சனை செய்து தொழுவர்" என இவ்வாறாக திருமுறைகளிலும் பலவாறு கூறப்பட்டுள்ளவற்றையும் நாம் அறியமுடிகிறது.

சிவனை "மேதபதிம்" "ஆவோ ராஜானமத்வரஸ்யருத்ரம்" என யாகாதிபதியாக வேதங்கள் கூறுகின்றன. இவ்விதம் யாகத்தின் மூலம் அக்கினி மூட்டி

அவி சொரிந்து வணங்குவதனை,

"கேள்வியர் நாடொறு மோது நல்வேதத்தர் கேடிலா வேள்வி செயந்தணா்"

"மண்ணிற் பெருவேள்வி வளர் தீப்புகை நாளும்"

"மறைவேள்வி பயின்றார் பாவத்தை விடுத்தார்"

"அந்தீயோடு தய மந்தணாளரா னெய்யால் வேட்டும்"

என இவ்விதம் பலவாறாக திருமுறை சிறப்பித்துக் கூறுகின்றன.

அடுத்து இறைவனுக்குரிய மந்திரங்களை உரிய முறைப்படி ஜபம் செய்து வழிபாடு செய்தலாகும். மந்திரம் என்பது நினைப்பவனைக் காப்பது எனப் பொருள்படும். திருமுறைகளும் ஓம் என்னும் பிரணவப் பொருளினுள்ளே அடங்குகின்றன. ஓம் என்னும் இந்த மஹா மந்திரம் சப்த கோடி மஹா மந்திரங்களிற்குள்ளேயும் சிறந்தது. எல்லாச் சமய நெறிகளுக்கும் ஆதாரமானது, முதன்மையானது. இருக்கு மந்திரம் கொண்டும் மறைபாடியும், "வேதத்தின் எண் பொருள்களால் வேதியர்கள் போற்றிப் பணிவார்கள்" "கீதத்திசையோடும் கேள்விக் கிடையோடும்" என மந்திரங்கள் மூலம் வழிபாடியற்றுகின்றமை பற்றியும் திருமுறைகள் பலவாறு கூறுகின்றன.

திருமுறைகள் நிறைந்த மந்திரசக்தி வாய்ந்தவை. "கண்ட பெரு மந்திரமே மூவர் பாடல்" என உமாபதி சிவாச்சாரியார் மூவர் பாடல்களையும் விளித்துக் கூறுகின்றார். மந்திரங்களுட் சிறந்த காயத்ரீ மந்திரத்திற்கு ஒப்பாக "ஓயாதே உள்குவார் உள் இருக்கும் உள்ளானை" ...... எனும் பாடலை அருளாளர்கள் குறிப்பிட்டுக் கூறுவதனையும் நாம் அறியலாம்.

மேலும் இறைவழிபாட்டிற்குரிய பஞ்சோப சாரங்கள் பற்றியும் திருமுறைகளில்

நறைமலிதருமளறொடு முகை
நகுமலர் புகை மிகு வளரொளி
நிறை புனல் கொடுதனை நினைவொடு
நியதமும் வழிபடுமடியவர்.
தீபமாலை தூபமுஞ் செறிந்த கையராகி
பெரும் புனுல் காலை மூழ்கிப் பித்தர்க்குப் பக்தராகி
அரும் பொடுமலர்கள் கொண்டங்கார்வத்தை உள்ளேவைத்து
விரும்பி நல்விளக்குதூபம் விதியினா
லிடவல்லார்க்கு..... தூய காவிரியினன்னீர்
கொண்டிருக் கோதியாட்டி குங்குமக்குழம்பு சாத்தி

இவ்வாறு இறைவனுக்குரிய உபசாரங்களை உள்ளன்புடன் பக்தியோடு சமர்ப்பித்து வழிபடும் முறைகள் பற்றி தெளிவாகக் கூறப்பட்டுள்ளதைக் காணலாம். மேலும் கிரியை முறையிலுள்ள பஞ்சகவ்ய திரவியங்கள் பற்றியும் "தேனெய்பாறயிர் தெங்கிளநீர் கரும்பின் தெளிபானஞ் சாறுமுடியார்" "பானெய் சேராணாஞ்சுமாடி கண்டாய்" என கூறப்பட்டுள்ளவற்றையும் காணலாம்.

இப்புவியிலே மனிதப்பிறவி எடுத்தவர்கள் பெறும்பயன் அன்புடனே சிவனடியார்களைத் தொழுதலும், திருவமுது செய்வித்தலும், சைவாகம விதிப்படி செய்யப்படுகின்ற சிவபிரானுடைய திருவிழாக்களைத் தரிசித்தலுமேயாகும் என்ற உண்மையைப் புலப்படுத்தி இறைவனுக்குரிய விழாக்களையும் விரதங்களையும் கூறி கும்பாபிஷேகம் முதலிய நைமித்திகக் கிரியைளைப் பற்றியும் திருமுறைகளில் பலவாறு கூறப்பட்டுள்ளதையும் காணலாம்.

"அடலானேறூரு மடிகளடிபரவி நடமாடல் காணாதே"

"ஐப்பசி ஓண விழாவுமருந்தவர்கள் துய்ப்பனவுங்

"தளத்தேந்தின முலையாள் தையலார் கொண்டாடும் விளக்கீடும்"

மேலும் ஆதிரை நாள், தைப்பூசநாள் மாசிக்கடலாடு நாள் போன்ற விழாக்களும்

"கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சரமமர்ந்தான்

பெருஞ்சாந்தி காணாதே..... என பெருஞ்சாந்தியாகிய கும்பாபிஷேக விழாக்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளதையும் காணலாம்.

மேலும் வேட்டலின்போது யாவற்றையும் அர்ப்பணிக்கும் நிலை தெய்வீக பக்குவநிலையை ஏற்படுத்துகின்றது. இத்தன்மை "அன்றே எந்தன் ஆவியும் உடலும் உடமை எல்லாமும் குன்றே அணையாய் என்னை ஆட்கொண்டபோதே கொண்டிலையே என திருமுறைகளில் கூறப்படுவது அர்ப்பணிப்புத் தன்மையையும் சரணாகதி பக்தி நிலையையும் புலப்படுத்துகின்றன.

புராணங்களில் கூறப்பட்ட சிவனுடைய அட்டமூர்த்தங்கள் பற்றிய வரலாறுகள் விழாக்களாகவும் விரதங்களாகவும் இன்றுவரை கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றதை நாம் காண்கிறோம். இவை பற்றிய விடயங்களும் பலவாறு திருமுறைகளில் கூறப்பட்டுள்ளதையும் நாம் காணலாம்.

தமிழாகமம் எனச் சிறப்பித்துக் கூறப்படும் திருமந்திரம் "எய்திய சீர் ஆகமத்தில் இயப்பிய பூசனைக்கேற்ப" வடமொழியிலுள்ள ஆகமப் பொருளைத் தரவே திருமூலர் தோன்றியதாகச் சேக்கிழார் கூறுகிறார். தண்ணிலார் சடையார் தாம் தந்த

ஆகமப் பொருளை மண்ணின் மிசைத்திருமூலர் திருவாக்கால் தமிழ் வகுப்ப வந்த இந்நூல் வேதாகமங்களைக் கொண்டெழுந்த வைதிக சைவ முதன்னூலாகும்.

வேதத்தைப் பசுவாகவும் திருமுறைகளை நெய்யாகவும் கூறி வேதத்தின் பயனைச் சைவமாகிய திருமுறைகளிலும், மெய்கண்ட சாஸ்திரங்களினாலும் பெறப்படலாம் என்பதனை "வேதம் பசுவதன்பால் மெய்யாகமம் நால்வர் ஓதும் தமிழதனினுள்ளுறு நெய்" என உமாபதி சிவாச்சாரியார் குறிப்பிடுகிறார்.

திருமுறைகளிலே கிரியை முறைகள் பற்றி விரித்துக் கூறப்பட்ட விடயங்களை நோக்கும்போது வேத சிவாகமங்களின் வழிவந்த கிரியை முறைகளினுடைய சிறப்பினையும் வளர்ச்சியினையும் உய்த்துணர முடிகின்றது. இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட திருமுறைகளை சொல்லியபாட்டின் பொருள் உணர்ந்து சொல்வார் – செல்வர் சிவபுரம் என்ற கூற்றினை உணர்ந்து பொருள் அறிந்து உரியமுறைப்படி ஓதி மனத்தின் கண் மாசிலனாகி தூய்மை, அவாவின்மை, அன்பு முதலிய நற்குணங்களுடன் எங்கும் நிறைந்த ஆண்டவனை – உயிர்களிடத்து ஜீவலிங்கமாக இருக்கின்ற பரம்பொருளை, உணர்ந்து மக்களிடையே அவனைக் கண்டு நெக்குருகித் தொண்டு செய்யும் சமய வாழ்வு வாழ்ந்து கிரியைகளின் பொருளுணர்ந்து ஞானவழியைப் பற்றி இகபர சுகங்களை அடைந்து "யாம் இச்சரீரம் பெற்றது இறைவனை வணங்கி முத்தி இன்பம் பெறும் பொருட்டேயாம்" என்பதற்கிணங்க நற்கதியை அடைவதற்கு முயல்வோமாக.

நன்றி – நல்லைக்குமரன் மலர் – 1999)

திருச்சிற்றம்பலம்

**வரையின் மாங்கனி யொடுவாழையின் கனியும்**
**வருடியும் வணக்கியும் மராமரம் பொருதும்**
**"கரையுமா கருங்கடல் காண்பதே கருத்தாய்க்**
**காம்பீலி சுமந்தொளிர் நித்தி லங்கைபோய்**
**விரையுமா காவிரித் துருத்தியார் வேள்விக்**
**குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்**
**உரையு மாறறிகிலேன் எம்பெரு மானை**
**உலகறிபழவினை அறவொழித்தானை.**

திருச்சிற்றம்பலம்

– 7ம் திருமுறை – சுந்தரமூர்த்தி நாயனார்

# நாதஸ்வரமேதை அமர ா பஞ்சாபிகேசன்

அது 80 களின் நடுப்பகுதி. சிறுபராயம். காரைநகர் மணற்காடு முத்துமாரியம்மன் ஆலயத்தில் கும்பாபிசேகம். ஏராளமான தவில், நாதஸ்வர கலைஞர்கள் வரிசையாக இருந்து கச்சேரி செய்து கொண்டிருந்தார்கள். நாதஸ்வரம் வாசித்தவர்களில் ஒருவர் மட்டும் மனதில் சட்டென்று ஒட்டிக் கொண்டுவிட்டார். நெடிய மெல்லிய தோற்றம். புன்னகை தவழும் வதனம். தலையிலே குடுமி. காதிலே கடுக்கன். நாதஸ்வரம் முழுவதும் தங்கப்பதக்கங்கள். முதன் முதலாக அவரை அங்கேதான் பார்க்கக் கிடைத்தது. இன்றும் அதே தோற்றம். முதுமை அவரை அணைத்துக் கொண்டாலும், அவருக்கேயான அடையாளங்கள் எதுவும் அகன்றதாகத் தெரியவில்லை. கம்பீரமாகவே நின்று தனக்கான கௌரவத்தை ஏற்றுக் கொண்டார். ஆம், அவர்தான் ஈழத்தின் சாவகச்சேரி மண் பெற்றெடுத்த ஒப்பற்ற நாதஸ்வரக் கலைஞன் திருவாளர் முருகப்பா பஞ்சாபிகேசன். கடந்த வருடம்(2010) இதே தினத்தில் (ஒக்ரோபர் 6) யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் அவருக்கு "கௌரவ கலாநிதி" பட்டம் வழங்கி கௌரவித்தது. தனது புகழையும் ஒரு படி உயர்த்திக் கொண்டது. வாழும்போதே அந்தக் கலைஞன் கௌரவிக்கப்பட்டிருக்கிறான் எனும் போது மகிழ்ச்சியே.

ஈழமண் தந்த நாதஸ்வர, தவில் இசைக்கலைஞர்கள் தங்களது பெயர்களை இசையுலகில் மிக ஆழமாகவே பதித்துள்ளார்கள். எம்மைப் பொறுத்தவரை கலைகளின் தாயகம் என்று நாம் நினைக்கின்ற இந்தியா குறிப்பாக தமிழகக் கலைஞர்கள் வியந்து நிற்கும் அளவு எங்கள் தேச இசைவேளாளர்களின் மரபும் வளர்ச்சியும் குறிப்பிட்டு சொல்லக்கூடிய அளவிற்கு வியாபித்து இருக்கிறது. எம் மண்ணின் அரும் பெரும் சொத்தாக இருந்து மறைந்த கலைஞர்களான தவில்மாமேதை வி.தெட்சணாமூர்த்தி, நாதஸ்வர மேதை என்.கே.பத்மநாதன் வரிசையில் வாழும் கலைஞனாக இன்றும் எம்முடன் இருக்கும் சாவகச்சேரி தந்த எம்.பஞ்சாபிகேசன் அவர்களும் முக்கிய இடம் பெறுகிறார்.

1924ம் ஆண்டு ஜூலை மாதம் 1ம் திகதி அக்காலத்தில் புகழ்பெற்ற தவில் வித்துவான் கே.முருகப்பாபிள்ளை சின்னப்பிள்ளை தம்பதியினருக்கு மூத்த மகனாகப் பிறந்தார். உடன் பிறந்தவர்கள் இருவர். அவர்களுள் ஒருவரான நடராஜசுந்தரம் ஈழத்தில் புகழுக்குரிய ஒரு தவில் வித்துவான். அண்ணனோடு இணைந்து 40 ஆண்டுகள் தவில் வாசித்தவர். இவரது சகோதரி இராசம்பாள் என்பவர் தனித்தவில் மணியம் என்றழைக்கப்பட்ட சுப்ரமணியத்தின் மனைவியாவார்.

1930 களில், அப்போது நாதஸ்வர உலகில் கொடிகட்டிப் பறந்த வித்துவான்களாக சண்முகலிங்கம்பிள்ளை மற்றும் அப்புலிங்கம்பிள்ளை இருந்தனர். ஒரு நாதஸ்வரத்துக்கு ஒரு தவில் என்று இருந்த காலத்தில் முதன் முதலாக சோடியாகச் சேர்ந்து நாதஸ்வரம் வாசித்த பெருமை இவ்விருவரையும் சாரும். இவர்களுக்கு தவில் வாசித்தவர்களுள் முருகப்பாபிள்ளையும் ஒருவர். தனது மகன் நாதஸ்வரம் பயில இவர்களே சிறந்த குரு என எண்ணி பஞ்சாபிகேசனை அவரது 10வது வயதிலேயே இவர்களிடம் அனுப்பி வைத்தார். தொடர்ந்து இராமையாபிள்ளை என்பவரிடமும் பி.எஸ். கந்தசாமிப்பிள்ளையிடமும் முறையாக நாதஸ்வரம் பயின்றதன் பேறாக தனது 15வது வயதில் முதற் கச்சேரியை பருத்தித்துறை சித்திவிநாயகர் ஆலயத்தில் அரங்கேற்றினார் பஞ்சாபிகேசன்.

இசையறிவை மேலும் வளர்க்கும் நோக்கோடு தமிழகம் சென்றார். அங்கே இவருக்கு குருவாக அமைந்தவர் கக்காயி நடராஜசுந்தரம்பிள்ளை. இவர் உலகம் போற்றிய நாதஸ்வர மேதை திருவாவடுதுறை இராஜரத்தினம்பிள்ளையின் மருமகன் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டிலேயே மேலும் அய்யம்பேட்டை வேணுகோபால பிள்ளையிடம் தனது இசையறிவை மெருகேற்றும் வாய்ப்பு பஞ்சாபிகேசனுக்கு அமைந்தது. இராஜரத்தினம்பிள்ளையும் , மகராஜபுரம் விஸ்வநாத ஐயரும் இணைந்து படைத்த இசைநிகழ்ச்சிகளை நேரே பார்த்தும் கேட்டும் உருகியதை இன்றும் நெகிழ்வோடு பகிர்ந்து கொள்ளுவார். அதனை தனக்குக் கிடைத்த பெரும்பாக்கியமாகவே கருதுகிறார்.

தாயகம் திரும்பியதும் அவர் ஈழத்து இசையுலகில் ஒரு மறுக்க முடியாத ஆளுமையாக இருந்தார் என்பதில் ஐயமேதுமில்லை. ஈழத்தில் பல பாகத்திலும் ஆயிரக்கணக்கான கச்சேரிகளை நடாத்தியிருப்பார். இசை ரசிகர்களின் ஏகோபித்த ஆதரவோடு வலம் வந்தவர். அவர்களின் நெஞ்சங்களில் எல்லாம் குடியிருந்தவர். இன்றும் குடியிருப்பவர். சபையினைக் கண்ணால் அளப்பதும், அவர்களின் நாடியறிந்து அவர்களுக்கு நாதத்தை வழங்குவதிலும் பஞ்சாபிகேசனுக்கு நிகர் அவரே. இதனை இன்றும் பல இசை இரசிகர்கள் நினைத்து மகிழ்கிறார்கள்.

அப்போது திமிரி (கட்டைக்குழல்), பாரி (நெட்டைக்குழல்) என கலைஞர்கள் தமக்கிடையே முறுகிக் கொண்டிருந்த நேரம். ஆண்டாண்டு காலமாக இசைவேளாளர்கள் வாசித்து வந்த பாரியையே தொடர்ந்து தனது கைகளில் ஏந்தி வாசித்து வந்தார். தனக்கென ஒரு பாணி அமைத்து அதன் வழியே தொடர்ந்து ஏறத்தாழ 70 ஆண்டுகள் இசையுலகில் கோலோச்சி இருந்திருக்கிறார். முதுமையின் காரணமாக கச்சேரிகளில் கால்வைக்க முடியாமல் இருந்தாலும் இதுநாள் வரை இசையுலகில் தனது கால்களை ஆழமாகவே பதித்திருக்கிறார். இசைக் கலைஞனுக்கு கற்பனை சக்தி அபாரமாக இருத்தல் வேண்டும். அத்தோடு அரங்கைக் கவரும்

வண்ணமும் படைக்கவேண்டும். இவையெல்லாம் ஒருங்கே அமையப் பெற்றவர் பஞ்சாபிகேசன். தனது கச்சேரியில் காருகுறிச்சி அருணாசலம் அவர்களின் பாதிப்பு இருப்பதாக அவரே அடிக்கடி கூறுவார். அதனால்தானோ தெரியாது இவர் வாசிக்கும் போது "சிங்காரவேலனே தேவா..." என்ற பாடல் இரசிகர்களை கட்டிப் போட்டுவிடும்.

தமிழகத்தில் இருந்து நாதஸ்வர, தவில் இசைக்கலைஞர்கள் ஈழத்தில் வந்து வாசித்த காலங்களில் எல்லாம் சற்றேனும் சளைக்காது அவர்கள் வியக்கும் வண்ணம் பல கச்சேரிகளை படைத்திருக்கிறார். அவர்கள் பாராட்டையும் பெற்றிருக்கிறார். திருவாளூர் இராஜரத்தினம் பிள்ளை, திருவாளூர் லெச்சையப்பா, அம்பல் இராமச்சந்திரன், பந்தனை நல்லூர் தெட்சணாமூர்த்திப்பிள்ளை, கோட்டூர் இராஜரத்தினம்பிள்ளை என தமிழக வித்துவான்களோடு சரிநிகராக நின்று வாசித்த பெருமை பஞ்சாபிகேசனைச் சாரும்.

ஈழத்து தவில் வித்துவான்களான தவில் மாமேதை தெட்சணாமூர்த்தி, என்.ஆர். சின்னராசா, எம். நடராஜசுந்தரம். என். குமரகுரு, நாச்சிமார்கோவிலடி கணேசபிள்ளை, ஆர். புண்ணியமூர்த்தி, என்.ஆர்.எஸ் சுதாகர் (சின்னராசாவின் மகன்) ரி.உதயசங்கர்( தெட்சணாமூர்த்தியின் மகன்), கே. சிவகுமார், ஆர். நித்தியானந்தம் எனப்பலரும் பஞ்சாபிகேசனுக்கு தவில் வாசித்திருக்கிறார்கள். மேலும் இவரோடு ஈழத்தின் அனைத்து முன்னனி நாதஸ்வரக் கலைஞர்களும் பல்வேறு கச்சேரிகளில் இணைந்து வாசித்திருக்கிறார்கள். இன்று வாழ்ந்து வரும் பல வித்துவான்கள் அதனை பேறாகக் கருதும் அதேவேளை, இன்றைய இளைய தலைமுறைக் கலைஞர்களுக்கு அவரோடு இணைந்து வாசிக்கும் பாக்கியம் கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் என்றும் இருக்கத்தான் செய்யும்.

கலைஞர்கள் பிரபல்யம் அடைந்துவிட்டால் அவர்களது தனிமனித ஒழுக்கம் என்பது சிறிது தடம்புரண்டுவிடும் என்பது பொதுவான கருத்து. வித்துவக்காய்ச்சல் அவர்களைப் பற்றிக் கொண்டுவிடும். ஆனால் அவற்றிற்கெல்லாம் மசிந்து விடாமல், நிலை தளம்பாமல் இன்றுவரையும் வாழ்ந்து வரும் உத்தமசீலர் என்றால் அது முற்றிலும் உண்மையே. இன்முகத்தோடு பேசுவதற்கும் பழகுவதற்கும் இனிய பண்பாளர். எதுவித பேதமும் பாராட்டாமல் அனைவரோடும் அன்பாக உறவைப் பேணினார். இவருக்கு முதன்முதலில் தங்கப் பதக்கம் கிடைத்தது யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஒரு மீலாத் நபி விழாவில்தான். இன, மதம் கடந்து இவரது இசை எல்லோரையும் ஈர்த்தது என்பதற்கு இது ஒரு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு. இதன் பின்னர் இவருக்கு பட்டங்கள், பதக்கங்கள், பாராட்டுகள் குவிந்த வண்ணமே இருந்தது.

"லய ஞான குபேர பூபதி" என்று எல்லோராலும் போற்றப்பட்ட தவில் மாமேதை தெட்சணாமூர்த்தி அவர்கள் தவில் வாசிக்கமாட்டேன் என்று

ஒதுங்கியிருந்தவேளை, எல்லோரும் அவரை அணுகி நீங்கள் தொடர்ந்தும் வாசிக்க வேண்டும், உங்கள் தனித்தவில் நாதத்தில் நாம் மூழ்க வேண்டும் என்று கேட்டுக் கொண்ட போது, வாசித்தால் பஞ்சாபிகேசனுக்கு மட்டுமே தவில் வாசிப்பேன் என்று மீண்டும் இசையுலகிற்குள் வந்தார் என்றால் பஞ்சாபிகேசனின் புகழ் வானளாவ நிற்கிறது என்பதில் எதுவித ஐயமுமில்லை.

ஒருதடவை மட்டுவில் அம்மன் கோவிலில் ஒரு திருவிழாவுக்காக சகல பிரபல நாதஸ்வர, தவில் வித்துவான்களை அழைத்திருந்தனர். அதை பத்திரிகையிலும் பிரசுரித்திருந்தனர். ஆனால் பஞ்சாபிகேசனுக்கு அவர்கள் உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுக்கவில்லை. அதேபோல் தெட்சணாமூர்த்தியை அழைக்கும் போது பஞ்சாபிகேசன் வாசிக்கிறார் என்று சொல்லியிருந்தனர். அப்படியே திருவிழாவிற்கு தெட்சணாமூர்த்தி வந்திருந்தார். கோவிலுக்கு வந்திருந்த பஞ்சாபிகேசனின் மகனிடம் அப்பா வரவில்லையா என்று வினாவ, மகனோ அப்பாவிற்கு அழைப்பு விடுக்கவில்லை என்று கூறினார். அவ்வளவுதான் தெட்சணாமூர்த்தி தவிலையும் எடுத்துக் கொண்டு சென்றுவிட்டார். அந்தளவிற்கு பஞ்சாபிகேசனின் வித்துவத்தின் மீதும், மனிதப் பண்பின் மீதும் அளவற்ற காதல் கொண்டவர் தெட்சணாமூர்த்தி.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள், தனது குலதெய்வமான தனங்களப்பு பிள்ளையார் கோவில் மணவாளக்கோலத் திருவிழாவுக்கு திரு.பஞ்சாபிகேசன் அவர்கள் வந்து வாசித்தால் சிறப்பாக இருக்கும் என அழைத்த போது, அதே தினத்தில் வேறு ஒரு ஆலயத்தில் கச்சேரி செய்வதற்கு ஒத்துக் கொண்டுவிட்டார். பண்டிதமணி அழைக்கிறாரே என்று ஒப்புக்கொண்டதைத் தட்டாமல் கொடுத்த வாக்கைக் காப்பாற்றினார். பண்டிதமணி அவர்கள் ஊஞ்சற்பாடலின் போதாவது வாசித்துத் தரும்படி கேட்க அதனை ஏற்று குறிப்பிட்ட நேரத்திற்கு வந்து வாசித்து அவரின் விருப்பத்தை நிறைவேற்றி வைத்தார். அந்தளவுக்கு பண்டிதமணி அவர்களின் மனத்தையும் வென்ற இசைக்கலைஞர் இவர். இவ்வாறுதான் பஞ்சாபிகேசன் அவர்கள் எல்லோருடனும் ஒன்றிப் பழகும் தன்மை கொண்டவர்.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் மரபுகளை எல்லாம் உடைத்து, சமய முறைகள் அற்று, மந்திரம் இல்லாமல் திருமணம் செய்து கொண்ட போது இராச வாத்தியமாகிய நாதஸ்வரம், தவிலை தவிர்க்க முடியாது எனச் சொல்லி, அதிலும் பஞ்சாபிகேசன் வந்து வாசித்தலே சிறப்பு என்று அழைத்து கௌரவித்தார். அதேபோல் பேராசிரியர் வித்தியானந்தன் அவர்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் இவருக்கு மட்டும் இரண்டு கச்சேரிகளை ஒழுங்கு செய்திருந்தார். அந்தளவுக்கு பஞ்சாபிகேசன் தனது இசையால் எல்லோரையும் கவர்ந்தவர்.

திருக்கேதீஸ்வர ஆலயத்தில் ஏறத்தாழ 40 வருடங்களுக்கு மேலாக ஆஸ்தான வித்துவானாக தொடர்ந்து வாசித்த பெருமையும் இவருக்குரியது.

1949ம் ஆண்டில் அளவெட்டியைச் சேர்ந்த மாணிக்கம் என்பவரின் மகளான இரத்தினம் என்பவரை மணந்து இல்லற வாழ்வில் இணைந்து கொண்டார். குடும்பவாழ்வின் பயனாக ஆறு பிள்ளைகள் இவருக்கு. அதிலே இருவரை தனது வழியிலேயே நாதஸ்வர இசைக்கென அர்ப்பணித்துக் கொண்டார். தந்தையைப் போல தனயன்மாரும் வித்துவத்திலே மட்டுமல்லாது பண்பாலும் அன்பாலும் அனைவரையும் கவர்ந்தனர். ஒருவர் எம்.பி. நாகேந்திரன். அடுத்தவர் எம்.பி.விக்னேஸ்வரன். ஈழமும் அதனைக் கடந்து உலகின் பல பாகங்களிலும் தந்தையைப் போல இசையால் தம்மை நிலைநிறுத்திக் கொண்டனர்.

தன்னுடைய 72 வயதில் பக்கவாத நோய் அவரை ஆட்கொண்டு உடலின் ஒரு பாகத்தை செயலிழக்கச் செய்த போது கூட, தனது மனவுறுதியால் அதனை எதிர்கொண்டு நோயிலிந்து மீண்டு வந்தார். தொடர்ந்தும் பல கச்சேரிகள் செய்தார். 2006 ம் ஆண்டு நண்பர் ஒருவரின் திருமண வீட்டிற்கு வந்து கச்சேரி செய்து சபையைச் சிறப்பித்தார். அந்த 82 வயதிலும் அவரின் அதே கம்பீரம், அதே இன் முகம், மக்களை மதிக்கின்ற மாண்பு எதுவும் குறைந்ததாகத் தெரியவில்லை. சற்று வியப்பாகவே இருந்தது. அந்தப் பெற்றோர்களின் அன்பான வேண்டுகோளுக்கிணங்க அரங்கிலே மங்கள வாத்தியம் வாசித்தது கலைக்காகவும், தன் மக்களுக்காகவும் அவர் எப்படி தன்னை அர்ப்பணித்திருந்தார் என்பதைப் புரியக் கூடியதாக இருந்தது.

ஏலவே குறிப்பிட்டது போல ஏ.வி.எம் சுல்தான் அவர்கள் மீலாத் விழாவில் வழங்கிய முதல்பதக்கத்தோடு இவர் பெற்ற கௌரவங்கள் தொடங்குகின்றன. இப்படிப்பட்ட ஒரு மகத்தான கலைஞனை எல்லோரும் கௌரவித்திருக்கிறார்களே என்று எண்ணும் போது அதில் வியப்பேதும் இல்லை.

திருக்கேதீஸ்வர தேவஸ்தானம் இவருக்கு "இசை வள்ளல் நாதஸ்வர கலாமணி" என்ற பட்டத்தினை வழங்கிக் கௌரவித்தது. சாவகச்சேரி இசை இரசிகர்கள் "நாதஸ்வர இசை மேதை" என்று விருது கொடுத்து மகிழ்ந்தனர். தென்மராட்சி இலக்கிய மன்றம் "நாதஸ்வர சிரோன்மணி" என்ற பட்டமும் பதக்கமும் கொடுத்து பாராட்டியது. இலங்கையின் கல்வி அமைச்சராக பதியுதீன் முகமது இருந்த காலத்தில், அமைச்சு மூலம் "நாதஸ்வர கான வாரிதி" என்ற கௌரவம் வழங்கப்பட்டது. திரு செல்லையா இராசதுரை அவர்கள் கலாசார அமைச்சராக இருந்த போது, அமைச்சினால் "சுவர்ண ஞான திலகம்" என்ற பட்டம் கிடைக்கப்பெற்றது. யாழ்ப்பாணக் கம்பன் கழகம் "இசைப் பேரறிஞர்" விருதினை வழங்கி சிறப்பித்தனர். "சிவகலாபூஷணம்" என்ற பட்டத்தினை யாழ்ப்பாண இந்து கலாசார மன்றம் வழங்கி மாண்பு சேர்த்தது. வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநர்

விருதும், இலங்கை அரசின் "கலாபூஷணம்" விருதும் அவருக்குக் கிடைத்த கௌரவங்களில் சேர்ந்து கொண்டன. இதே போல இவர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கச்சேரி வாசித்த பல ஆலயங்களிலும், மன்றங்களிலும் தங்கப்பதக்கங்களும், பாராட்டுப்பத்திரங்களும் இவரது இசைக்கு கௌரவங்களாகக் கிடைத்தன.

இவற்றிற்கெல்லாம் சிகரமாக அமைந்தது, இவரது வித்துவத்திறமையையும் தனியொழுக்க மாண்பையும் கருத்தில் கொண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 2010 ம் ஆண்டு ஒக்ரோபர் 6ம் திகதி "கௌரவ கலாநிதி" பட்டம் வழங்கி இவரைக் கௌரவித்ததே. வாழும் போதே ஒரு கலைஞன் கௌரவிக்கப்படுவதும் அங்கீகரிக்கப்படுவதுமே அவன் கலைக்கு ஆற்றிய சேவையை உணர்ந்து கொள்ளப் போதுமானது. அந்தவகையில் திரு. பஞ்சாபிகேசன் போற்றுதலுக்கு உரிய ஒப்பற்ற கலைஞன் ஆவார்.

கௌரவ கலாநிதிப் பட்டம் கிடைத்தமைக்காக இசைக் கலைஞர்கள் சேர்ந்து நடாத்திய ஒரு கௌரவிப்பு விழாவில் பஞ்சாபிகேசன் அவர்கள் இணுவில் கந்தசுவாமி கோவிலில் இருந்து ஊர்வலமாக இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலுக்கு அழைத்துவரப்பட்டார். அங்கே கலாமண்டபத்தில் பெரும் விழா நடந்தது. கல்விமான்கள், கலைஞர்கள், வர்த்தகப் பெருமக்கள் என அனைவரும் ஒன்றுகூடி வாழ்த்தி மகிழ்ந்தனர். இது ஒரு கலைஞன் வாழ்ந்ததற்கான அடையாளமாகக் கொள்ளலாம். வாழும் போதே கௌரவிக்கப் பட்ட ஒரே ஒரு நாதஸ்வரக் கலைஞர் இவர் என்றே நான் கருதுகிறேன். அதனால்தானோ தெரியாது பெரும் திரளாகத் திரண்டு தங்கள் பிதாமகரை வாழ்த்தியும் வணங்கியும் மகிழ்ந்தனர். இந்த ஆண்டு (2011) பெப்ருவரி மாதம் 27ம் திகதி சாவகச்சேரி மண் பஞ்சாபிகேசனுக்கு பெருவிழா எடுத்து கௌரவித்தது. சாவகச்சேரி சிவன் கோவில் கலாசார மண்டபத்தில் தென்மராட்சி கல்விமான்கள், கலைஞர்கள், வணிகர்கள், கலாரசிகர்கள் என அனைவரும் திரண்டிருந்தனர். இசைக்காக தன்னை அர்ப்பணித்த ஏந்தலை உள்ளத்தில் ஏற்றி வைத்து வணங்கி மகிழ்ந்தார்கள்.

பஞ்சாபிகேசன் அவர்களின் புகழும் நாமமும் என்றும் எமது தேசத்தையும் மக்களையும் தாண்டி உலகத்தோடும் பயணிக்க வேண்டும்.

இந்தத் தகவல்களை சேகரிப்பதற்கு உதவிய பஞ்சாபிகேசனின் மகன் எம்.பி.நாகேந்திரன் அவரது மருமகன் பாலகிருஷ்ணன் மற்றும் நண்பர்கள் சிவதீபன், சிவரதன், நவநீதன் ஆகியோருக்கு நன்றிகள்.

மாதங்கி தர்மலிங்கம் என்பவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே திருவாளர் பஞ்சாபிகேசன் அவர்களின் இசை வாழ்வு தொடர்பாக ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்திருந்தார். தகவலுக்காக அவரது கட்டுரையும் உசாத்துணையாக பயன்பட்டது. அவருக்கும் நன்றிகள்.

**நன்றி : கிருகுவேலி – இணையதளம் – முகநூல்**

# பாராட்டி வாழ்த்துகிறோம்



யாழ். பல்கலைக்கழகத்தில் 8-6-2018இல் நடைபெற்ற பொது பட்டமளிப்பு வைபவத்தில் கலைமாணி ( சிறப்பு ) பட்டம் பெற்றுக்கொண்ட துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவி

**செல்வி செல்வதியம்மா பூலோகம்**

(B.A. Hons 1st Class)

அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.



யாழ். பல்கலைக்கழகத்தில் 8-6-2018இல் நடைபெற்ற பொது பட்டமளிப்பு வைபவத்தில் கலைமாணி ( சிறப்பு ) பட்டம் பெற்றுக்கொண்ட துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவி

**செல்வி விதுசாயினி பாலச்சந்திரன்**

(B.A. Hons)

அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**

**நிர்வாக சபை**

# யாழ்ப்பாணத்தில் பெண் தெய்வ வழிபாடு

திரு. பொ. சந்திரசேகரம்
விரிவுரையாளர் - இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## பெண் தெய்வ வழிபாடு

முன் வரலாற்றுக்கால மனிதர்களின் சமய நம்பிக்கைகள் கடவுள் நம்பிக்கையாகப் பரிணமித்தபோது பெண் (தாய்த்) தெய்வவழிபாடு தோன்றிவிட்டதெனலாம். இதனை வரலாற்று அறிஞர்கள் கற்காலம் தொட்டு நாகரிக காலம் வரை தாய்த் தெய்வழிபாடு மேலோங்கிக் காணப்படுகின்றது எனக் குறிப்பிடுகின்றனர். இந்திய வரலாற்றில் சிந்துவெளி மக்களின் தாய்த்தெய்வ வழிபாடு வேதகால மக்களின் பெண் தெய்வ வழிபாடு, சங்ககால மக்களின் தாய்த்தெய்வ வழிபாடு என்பன தாய்த்தெய்வ வழிபாட்டின் பழைமையை எமக்கு எடுத்துக்காட்டுகின்றன. இந்தியப் பண்பாட்டுப் பின்புலத்தில், இலங்கையிலும் தாய்த்தெய் வழிபாடு மிக முக்கியத்துவம் உடையதாகின்றது. மகாவம்சம் போன்ற பௌத்த, பாளி நூல்களில் யக்ஷி வழிபாடு பற்றி கூறப்பட்டுள்ளது. பண்டுகாபயன் என்னும் அரசன், வடவாமுகி (குதிரை முகம்) என்ற யக்ஷியை மாளிகை வனத்தில் அமர்த்தி பலிபூசை நடத்தியமை பற்றி அறியப்படுகின்றது. இது இந்து மக்களிடம் காணப்படுகின்ற வராகி வழிபாட்டை நினைவூட்டுகின்றது.

இலங்கையின் பஞ்ச ஈஸ்வரங்களான திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், முன்னேஸ்வரம், தொண்டேஸ்வரம் முதலியவை புராதனமானவை. இங்கு பெண் தெய்வம் என்ற நிலையைக் கடந்து இறைவனது ஆற்றல் அல்லது சக்தி என்ற நிலையில், அம்மனுக்குத் தனியான சந்நிதி அமைக்கப்பட்டு வழிபடப்பட்டு வந்துளது. சிவாகமங்கள் சிவபூசையை விதிக்கின்றமையால், சிவாகம மரபில் நின்ற இராவணன், குளக்கோட்டன் முதலிய அரசர்கள் சிவவழிபாட்டுடன் இணைந்த நிலையில் சக்தி வழிபாட்டைச் சிறப்பித்திருந்தமையைக் காணலாம். இவற்றுடன் சக்தி வழிபாடு பற்றிய பழைய மரபையே யாழ்ப்பாண வைபவமாலை "திருத்தம்பலேஸ்வரி" கோயிலெனக் கூறுகின்றது. கீரிமலைக்கு அண்மித்த பகுதியில் இருந்ததாகக் கருதப்படும் இக்கோயில் யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட அம்மன் ஆலயங்களுக்கு எல்லாம் முன்னுள்ள காலப்பகுதியில் இவ்வாலயம் இருந்தது என வரலாற்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இவற்றுடன் சுடுமண்ணிலான பெண்ணுருவங்கள், நாணயங்களில் வரையப்பட்ட பெண் தெய்வங்கள் மற்றும் லக்சுமி பிளாக் என்றழைக்கப்படும் நீள்சதுர நாணயங்கள், பிராமிக் கல்வெட்டுக்கள் என்பன சக்தி வழிபாட்டின் தொன்மையைச் சான்றுபடுத்தி நிற்கின்றன.

## பெண்தெய்வ வழிபாட்டின் படிமலர்ச்சி

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இன்றுள்ள சக்தி வழிபாடு அல்லது அம்மன் வழிபாடு என்பது ஒரு காலத்தில் கண்ணகி வழிபாடாக இருந்து சக்திவழிபாடாகப்

படிமலர்ச்சி அடைந்தது என்று கருதவேண்டி உள்ளது. "இலங்கைத் தீவிலும் (யாழ்ப்பாணம்) யக்ஷி வழிபாடாக (இயக்கச்சியில்) ஆரம்பித்து, கண்ணகி வழிபாடாகப் பரிணாமம் பெற்று பின்னர் காளி, பத்திரகாளி, முத்துமாரி, மகிஷமர்த்தினி என உக்கிர உணர்வு பெற்ற தெய்வங்களாகப் பரிணாமம் பெற்று, சமய தத்துவ வளர்ச்சி நிலையின் இறுதிக் கட்டத்தில் இராஜராஜேஸ்வரி எனவும், சிவகாமியம்மன் எனவும் நாமங்கள் பல பெற்றது என்ற பேராசிரியர் செ. கிருஷ்ணராஜாவின் கருத்து இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் வளர்ச்சி அடைந்து வந்த சக்தி வழிபாட்டின் மூன்று வகையான மரபுகளை இங்கு அவதானிக்கலாம்.

1) மக்கள் சமய நம்பிக்கையின்பால் ஈர்க்கப்பட்டு, பக்தி முறையில் பொங்கல், படையல், குளிர்த்தி, காவடி, தீ மிதித்தல் போன்ற நிலைகளில் மேற்கொள்ளப்படுகின்ற வழிபாடுகள்.
   உதாரணம் : கண்ணகி, பிடாரி, பேச்சியம்மன், காளி வழிபாடுகள்.
2) வேதசிவாகம நெறிமுறைகளில், கட்டுக்கோப்பான ஒழுங்குமுறைக்கு உட்பட்டு மேற்கொள்ளப்படுகின்ற வழிபாடுகள்.
3) இரண்டுவகை மரபுகளும் இணைந்தநிலையில் மேற்கொள்ளப்படுகின்ற வழிபாடுகள்.
   உதாரணம் : மாரியம்மன் வழிபாடு

இவ்வாறு நாம் மரபுகளை மூன்றாகப் பார்த்தாலும், பெரும்பாலான மரபுகள் எல்லாமே சாதாரண மக்களின் சமய நம்பிக்கையில் இருந்து தோன்றியதை அவதானிக்க முடிகின்றது. அவை ஆகம சாஸ்திர மரபிலிருந்து தோன்றியவை அல்ல. அது போலவே இச்சமய நம்பிக்கைகளில் பெரும்பாலானவை கண்ணகி வழிபாட்டு மரபைச் சார்ந்ததாகவே காணப்படுகின்றது. சிறுபால் பேச்சியம்மன், நாச்சியம்மன் வழிபாட்டைச் சார்ந்ததாக உள்ளது. இவ்வகையில், யாழ்ப்பாணப் பெண்தெய்வ வழிபாட்டு மரபை ஆராய்கின்றபோது, கண்ணகி வழிபாட்டு மரபு பற்றி ஆராய்வது இன்றியமையாதது. இங்கு கண்ணகி வழிபாடு இருந்து வந்தமை பற்றிய ஐதீகத்தினை மூன்று நிலைகளில் ஆராயலாம்.

1) கண்ணகி விழாவிற்குச் சென்ற கஜபாகு மன்னன் ஜம்புகோளப் பட்டினத்தில் (சம்பில் துறையில்) வந்திறங்கினான் என்றும், அதன் சின்னமாகக் கந்தரோடையிலுள்ள அங்கணாமக்கக்கடவையில் பத்தினிக்குக் கோயில் அமைத்து, பின்னர்தான் தங்கிச் சென்ற இடங்களிலெல்லாம் கோயில் அமைத்தான் என்று கூறப்படுகின்றது.
2) கண்ணகி தன்னை ஐந்து தலை நாகமாக மாற்றி மதுரை மாநகரம் துறந்து தெற்கு நோக்கி ஊர்ந்து சென்று முதலில் நயினாதீவில் தங்கி, பின்னர் சீரணி, அங்கணாமக்கடவை, நவாலி, அளவெட்டி, சுருவில், கோப்பாய், மட்டுவில் முதலிய இடங்களில் தங்கிச் சென்றாள் என்று கூறப்படுகின்றது.

3) கண்ணகி வழிபாடு பற்றி ஆலயங்கள் தோறும் ஐதிகங்கள்.
உதாரணம் : புங்குடுதீவு கண்ணகை அம்மன்.

இதன்வழி யாழ்ப்பாணத்துப் பெண்தெய்வ வழிபாடு கண்ணகி வழிபாட்டுடன் பின்னப்பட்டே உள்ளது. அதேநேரம் ஏனைய முத்துமாரியம்மன், காளியம்மன்முதலிய பெண்தெய் வழிபாடுகளும் கண்ணகி வழிபாட்டிலிருந்து தோன்றியதாகவே கருதப்படுகின்றது. டாக்டர் ஆ. ஆரோக்கியசாமி என்பவர் மாரியம்மன் வழிபாடு கண்ணகி வழிபாட்டில் இருந்துவந்தது எனக் குறிப்பிடுகின்றார். "சோமலே" போன்றோரும் பத்தினி வழிபாட்டினை வீரபத்திர காளியாக, அடையாளம் கண்டு பத்தினி வழிபாட்டிற்குரிய மரபுகளை எடுத்துக்காட்ட முயற்சித்துள்ளனர். இவ்வகையில், மாரியம்மன் வழிபாட்டையும் கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புபடுத்தினால், யாழ்ப்பாணத்திலுள்ள நாற்பதிற்கு மேற்பட்ட ஆகம மயமான அம்மன் ஆலயங்கள் கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புடையவையாகக் காணப்படுகின்றன.

## பெண்தெய்வ வழிபாடுகளும் ஆகமமயப்படுத்தலும்

யாழ்ப்பாணம் நல்லூரில் தோன்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் வேதசிவாகமத்தை நன்கு கற்றவர் மனிதப்பிறவி தரப்பட்டதன் நோக்கம் என்பது முத்தியடைவதுதான் எனப் பிரகடனப்படுத்தியவர் சைவசித்தாந்த சாஸ்திர புலவர் மக்கள் பக்தி மார்க்கத்தில் வழிபடும் சிறு தெய்வங்களை "சென்றுதாம் சிறு தெய்வம் சேர்வோம் அல்லோம்" என்ற அப்பர் வாசகத்துக்கு ஏற்றாற் போல் அவற்றை வழிபடக்கூடாது எனக் கண்டித்தவர், அதிலும் அவர் கண்ணகி வழிபாட்டை மிகவும் கடுமையாக விமர்சித்தவர். இதன் காரணமாக, பழைய மரபுரீதியான பக்தி மரபு சாஸ்திர ரீதியான பக்தி மரபுக்கு வழிசமைக்கின்றது. பெரியபுராண ரீதியில் கூறுவதாயின் கண்ணப்பரின் பக்தி மரபும் – சிவகோசரியாரின் சாஸ்திர ரீதியான பக்தி மரபும் தம்முள் முரண்படுவது போன்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆறுமுக நாவலரின் சிறுதெய்வ வழிபாடு பற்றிய கண்டனத்திற்குப் பிறகு மரபுரீதியான வழிபாடுகள் ஒரு நூற்றாண்டைத் தாண்டி இற்றைவரை ஆகமமயப்படுத்தலுக்கு உட்படுதல் நடந்தே வருகின்றது.

இம்மாற்றங்கள் வேதாகமங்களை நன்கு கற்ற ஆறுமுகநாவலர் மற்றும் அவர்தம் மாணவர் பரம்பரையினாலும், பிராமண சமூகத்தவர்களாலும் மேற்கொள்ளப்பட்டன. பிராமணர்கள் வேத மரபில் மட்டுமன்றி ஆகம மரபிலும் தேர்ச்சி பெற்றவர்கள் ஆகையினாலும், குருவாக இருந்து மக்களுக்கு நல்வழி காட்டுபவர்களாகவும் இருப்பதனால் ஆகம மயப்படுத்தல் இலகுவாக அமைந்தது. குறிப்பாக, மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயம் ஆகம மரபுக்கு வருவதற்குப் பெரும்பங்காற்றியவர் சிவஸ்ரீ. ஆ. பாலசுந்தரக்குருக்கள் என்பது ஆலய வரலாற்றினால் அறியப்படும் செய்தியாகும்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை இம்மாற்றம் பற்றிக் குறிப்பிடும்போது, "கண்ணகிக்குக் கோயில் கட்டி வழிபடுவதற்கு ஆகமங்களில் விதியில்லை. ஆறுமுகநாவலர் காலம் தொடக்கம் கண்ணகி கோவில்களில் பெரிய மாற்றங்கள் நடந்து வருகின்றன. பராசக்தியே எல்லாத் தெய்வமுமாய், அவ்வத்தெய்வத்தை வழிபடுவோர்க்கு நிக்கிரம், அனுக்கிரகம் பாலிப்பவள் இந்த முறையில் பாரம்பரியமாக நடந்துவரும் கண்ணகி வழிபாட்டை நெறிப்படுத்தி அருள்வாளாக என்று பராசக்தியை வேண்டுதல் செய்து பிரார்த்திப்போமாக". மேலும், "அவளால் வந்த ஆக்கம் இவ்வாகமம் எல்லாம்" என்பது சிவஞானசித்தியார் எனக் குறிப்பிடுதல் காணலாம். இவ்வகையில் வட்டுக்கோட்டை கண்ணகை அம்மன் ஆலயம் சிவாலயமாக வளர்ந்தமை இங்கு சுட்டுதலுக்கு உரியது. அதாவது கண்ணகை என்பதை சிவசக்தி அம்சமாகச் சேர்த்து கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் கோவிலாக ஆகம மரபிற்கமைய மாற்றப்பட்டு வழிபடப்பட்டு வருகின்ற அதேவேளை அருகே கண்ணகி வீற்றிருந்த மரத்தடியில் கண்ணகிக்குத் தனியான கோவிலும் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வகையில் மரபு ரீதியான ஆகமமயப்படுத்தல் என்பது மட்டக்களப்பு போன்ற ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே அதிகளவு மாற்றம் நிகழ்ந்துள்ளது. இதற்கு பின்வரும் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

1) 19 ஆம் நூற்றாண்டில் தோன்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்தம் மாணவர்கள் மற்றும் அறிஞர்களினால் மக்களுக்கு ஆகமமரபு சார்பான விழிப்புணர்வு ஊட்டப்பட்டமை.
2) வேத ஆகம முறைகளைப்பற்றி பிராமணர்களும் பொதுமக்களும் போதிய அறிவைப் பெற்றுவருதல்.
3) மஹோற்சவம் முதலிய விழாக்களைச் செய்யவேண்டும் மற்றும் வழிபாட்டு முறைகள் ஒழுங்குமுறையில் நடைபெறவேண்டும் என்ற மக்களது பெருவிருப்பு மற்றும் சமூக ரீதியான போட்டித்தன்மை.
4) வழிபாட்டில் ஏற்படும் குற்றம், குறைகள் தம்மைத் தாக்கும் என்ற அச்சம்.
5) மரபுரீதியான வழிபாட்டைப் பேணுவதில் உள்ள சிக்கல்கள். அதாவது, கல்வியறிவு, தொழில், சுகாதாரப் பழக்கவழக்கங்கள், கடந்த கால அனுபவங்கள் என்பவற்றின் அடிப்படையில் பழைய மரபு ரீதியான வழிபாட்டு முறைகளில் சிலவற்றை மக்கள் கைவிட விரும்புதல்.
6. மரபுரீதியான வழிபாட்டை ஏற்றுக்கொண்டு வழிநடத்திச் செல்ல புதிய தலைமுறையினர் தயாராக இல்லாமை. அதாவது, கோயில்களின் உரித்தாளர்கள் அல்லது பூசகர்கள் என மரபுவழியாக வந்தவர்களின் பிந்திய தலைமுறையினர் வேறு தொழில்களை நாடியமை, வெளிநாடு சென்றுள்ளமை, அசைவ உணவுப்பழக்கத்திற்கு அடிமையாகியமை.

மரபுரீதியான வழிபாட்டு முறையில் நடைபெற்று வந்த ஆலயங்கள் சிறுகொட்டில்களாக இருந்தன. பின்னர் கல்லினால் ஆலயத்தை அமைக்க முற்படும்போது ஆலய அமைப்பென்பது ஆகம மரபைச் சார்ந்து தான் இருக்கவேண்டும் என்ற கருத்து வலுப்பெற்றது. குறிப்பாகக் கிராமியத் தெய்வங்களுள் கண்ணகி, பேச்சியம்மன் முதலியவற்றுக்கு நித்திய, நைமித்தியப் பூசைகளோ, பூஜா பத்ததிகளோ இல்லை. எனவே சிவாகம மரபில் கொடியேற்றத் திருவிழா செய்வதற்கு முடியாது. எனவே இவ்வாலயங்கள் ஆகம மரபுக்கு உட்பட்ட ஆலயங்களாக மாற்றப்பட்டன. உதாரணமாக நாயன்மார்கட்டு இராஜராஜேஸ்வரி அம்மன் தலமான்மியத்தில் எவ்வாறு பேச்சியம்மன் இராஜராஜேஸ்வரி அம்மனாக மாற்றப்பட்டுள்ளது என்பது பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. "ஆறுமுகநாவலரின் தமையனார் மகன் த. கைலாசபிள்ளை மற்றம் சிலர் பேச்சியம்மன் வழிபாட்டிற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால் ஊர் மக்கள் எல்லோரும் கூடி, ஒரு கூட்டம் போட்டும், நவசக்திகளின் திருநாமங்களையும், வழக்கத்திலிருந்த பேச்சியம்மன் என்ற திருநாமத்தையும், சீட்டுக்களிலே எழுதி அவற்றுள் ஒன்று மூன்று வயது நிரம்பாத சிறுதி ஒருத்தியைக் கொண்டு எடுப்பித்தனர். அவள் எடுத்த திருவுளச்சிட்டு "பேச்சியம்மன்" என்று எழுதப்பட்டதாகும். இதனை ஏற்காத வைத்தியபூபதியும், ஸ்ரீமத். த. கைலாசபிள்ளையும், முத்துச்சுவாமிக் குருக்களும் மீண்டும் திருவுளச்சிட்டு எடுத்தல் வேண்டும் என்றனர். அவ்வாறு திருவுளச்சிட்டு எடுத்தபொழுது ஸ்ரீ இராஜராஜேஸ்வரி என்ற திருநாமம் வந்தது. அன்றிலிருந்து பேச்சியம்மன் "ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன்" எனவும் அழைக்கப்பெறலாயிற்று.

மரபுரீதியாக வழிபடப்பட்டு வந்த ஆலயங்கள் ஆகமமரபுக்கு மாற்றப்படுகின்றபோது வழமையாக ஆகம மரபில் யந்திரப் பிரதிஷ்டை செய்து அதன் மேல் சிலா விக்கிரகம் வைப்பார்கள். இத்தகைய சந்தர்ப்பங்களில் பல எதிர்ப்புக்கள் ஏற்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. குறிப்பாக, வடகோவைக் கண்ணகை அம்மன், ஆகமமரபுக்கு வந்தும் மீண்டும் மரபுக்குத் திரும்பியமை முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது. 1924இல் இக்கோவிலின் மூலமூர்த்தி கண்ணகைக்கு இயந்திரம் வைத்துக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டதாகவும், பின்னர் ஏற்பட்ட சில தீய விளைவுகள் காரணமாக 1926இல் மீண்டும் இயந்திரம் வையாது கும்பாபிஷேகம் செய்யப்பட்டதாகவும் அறியமுடிகின்றது. 1956இலும் இப்பிரச்சினை ஏற்பட்டு மீளவும் இயந்திரம் வையாது கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இவ்வாலயம் முழுமையான ஆகமமரபுக்கு மாற்றப்படாதநிலையில் கொடியேற்றத் திருவிழா செய்யப்படாது அலங்காரத் திருவிழா செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இங்கு ஆகம மயமாக்கலில் ஏற்பட்ட பிரச்சினையைத் தொடர்ந்து, மேலும் மரபை இறுக்கமாகக் கடைப்பிடிக்கவேண்டும் என்று கருதி, கண்ணகியின் வரலாற்றை ஆலயத்தூபியில் சிற்பங்களாகவும் மற்றம் சுவரோவியங்களாகவும் அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பக்தி மார்க்கத்திலும், சாஸ்திர மரபு நோக்கிய நிலையிலும் வழிபடப்படும் ஆலயம் மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோவில். ஆகம மரபில் பூசைகள் நடந்தாலும், மூலவர் சிலாவிக்கிரகமாக இல்லாது தாமிரத்திருமூர்த்தமாய் உள்ளது. இங்குள்ள எழுந்தருளி மூர்த்தி ஸ்ரீ கண்ணகா பரமேஸ்வரியாகும். இவற்றுடன் மனோன்மணி, சிவகாமசுந்தரி, ஸ்ரீசக்கர நாயகி, வராகி முதலிய தெய்வங்களும் இவ்வாலயத்தில் உள்ளது.

ஆலய வரலாற்றின்படி ஆலய எசமானால் செய்யப்பட்ட பூசை, 1900 ஆம் ஆண்டு முதல் பிராமணர்கள் பூசை செய்து வரப்படுகின்றது. ஆரம்பத்தில் ஆசனத்தில் கும்பம் வைத்து முகம் சாத்தி, அம்மனுக்குப் பூசை நடைபெற்றுவந்தது. 1946ஆம் ஆண்டிலிருந்து கண்ணகை அம்மன் தாமிர விக்கிரகம் பிரதிட்டை செய்து மகா கும்பாபிஷேகம் முதன் முதலாக நிகழ்ந்தது. 1947இல் இருந்து கொடியேற்றவிழா உட்பட்ட மஹோற்சவ நிகழ்வு நடைபெற்று வருகின்றது. 1958இல் சிவகாமி அம்மன் தாமிர விக்கிரகப் பிரதிட்டை நடைபெற்றது. 1961இல் ஸ்ரீ சக்கரந்திரம் செய்து வைத்து பிரதிஷ்டா கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1964இல் சண்டேஸ்வரி வைக்கப்பட்டது. இவ்வாறு சாஸ்திர மரபுநோக்கிய ஆலய வளர்ச்சியில் கண்ணகி சிவசக்தியாக மாற்றப்பட்டதை 1946இல் மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனத்தில், "ஆன்மாக்களது தியானாதிகளுக்கும் தாம் அகப்படுதல் வேண்டும் என்னுந் திருவருளினால் சக்தி காரியமாகிய உருவத்திருமேனி கொண்டு எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ கண்ணகாம்பிகைக்கு வேதபாராயண சங்கமங்கள வாத்தியங்களுடன் கும்பாபிஷேகம் நடைபெறும்" எனக் குறிப்பிட்டிருத்தல் காணலாம்.

இவ்வாலயத்தின் உரித்தாளர் குடும்பத்தைச் சேர்ந்த ம.குழந்தைவேலு என்பவர் கண்ணகிக்கு ஆகம வழிபாட்டில் இடம் இல்லை என்பதால் தனக்குரிய பரிபாலன காலத்தில் கொடியேற்றம் உட்பட மஹோற்சவ நிகழ்ச்சிகளை நிறுத்தியிருந்தார் என்பதை அறியமுடிகின்றது. இதனை, 1955இல் வெளிவந்த மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனத்தில், "சர்மான்களுக்கும் மனோபிஷ்டப்படி அனுக்கிரகிக்கும் சர்வரோக நிவாரணியுமாகிய கண்ணகாம்பாளுக்கு வருடந்தோறும் நிகழ்ந்த நித்திய, நைமித்தியங்கள் நடைபெறாமையால், இவ்வாண்டு நடப்பதற்கு பிராயச்சித்தமாக கும்பாபிஷேகம் செய்யப்படுகின்றது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்வழி, அக்காலத்தில் மரபுரீதியான வழிபாட்டைத் தொடர்ச்சியாகப் பேணவேண்டும் என்று பலர் விரும்பி உள்ளனர் என்பது வருகின்றது.

## பெண் தெய்வ வழிபாட்டில் பக்தி மார்க்கமும் சாஸ்திர மரபும்

பக்தி மார்க்கத்தில் மக்கள் தாங்கள் கருதுகின்ற தெய்வத்தை நினைத்து வழிபாடு இயற்றுகின்றார்கள். அவர்கள் ஆகமப்பூசை பற்றியோ, திருவுருவ அமைப்பு பற்றியோ சிந்திப்பதில்லை. அதுபோலவே ஆலயத்தில் பூசை செய்கின்ற

அந்தணர்களும், ஆலய விக்கிரக அமைப்பு பற்றியோ, அதிலுள்ள மூர்த்தி பற்றியோ எந்த ஆராய்ச்சியும் செய்யாது பக்தி மார்க்கத்திலேயே ஆண் தெய்வமாயின் அதற்குரிய மந்திரத்தையும், பெண் தெய்வமாயின் அதற்குரிய மந்திரத்திலும் பூசை செய்கின்றார்கள். எல்லாச் சக்திகளுக்கும் பொதுவாக லலிதா சகஸ்ரநாமத்தில் வரும் மந்திரங்களைப் பயன்படுத்துகின்றார்கள். இதற்கு ஆதாரமாக உடுவில் பிரதேசத்தில் உள்ள அம்மன் ஆலயம் ஒன்றை மக்கள் மீனாட்சி ஆலயம் என்று கருதி வழிபடுகின்றனர். ஆனால் உள்ளேயுள்ள சிலாவிக்கிரகம், மனோன்மணிக்குரிய வடிவமைப்பில் அமைந்துள்ளது. இங்கு மக்கள் சக்தி நிலைகளையோ, அருள் வேறுபாடுகளையோ அவற்றின் நிலைகளையோ அறிவதில்லை. பக்தி மார்க்கம் ஒன்றே அவர்கள் குறிக்கோளாக உள்ளது.

ஒரு விக்கிரகத்தை உருவாக்கும்போது, அதை எந்த வடிவில் உருவாக்கவேண்டும் என்று, அதை உருவாக்க விரும்பும் எஜமான் கருதுகின்றாரோ அதற்கேற்றாற்போல, சிற்ப சாஸ்திரத்தைக் கற்றுத் துறைபோகிய சிற்பாசிரியன் குறித்த தெய்வத்தின் வடிவமைப்பு என்ன? அதனுடைய இலக்கணம் என்ன என்பதைச் சிந்தித்து, அந்த சக்தியை மனதில் எண்ணி அதற்குரிய தியான முறையில் பெரிதும் முயன்று உருவாக்குகின்றான். இதனால், குறித்த தெய்வசக்தி அதிலே பெரிதும் பதிந்துவிடுகின்றது. அது அருள் செய்யத்தக்கதாகின்றது. அதனை மேலும், கும்பாபிஷேகம் முதலிய விசேட செயல் நிலைகளினால் அந்தண சிவாச்சாரியார்கள் மேலும் அருள் செய்யக்கூடியதாக உயர்த்துகின்றார்கள். அத்தெய்வம் குறித்தே மக்கள் வழிபாடு நிகழும். அத்தெய்வம் குறித்தே அபிஷேகம், அலங்காரம், நைவேத்தியம் முதலிய உபசாரங்கள் செய்யப்படும். ஒரு விக்கிரகத்திலே தெய்வத்தை எழுந்தருளச் செய்தால் அதன் இடமாகக் கொண்டு பல யுகங்களுக்கும் அது அருள்பாலிக்கும் என்பதே ஆன்றோர் அபிப்பிராயம். இது இவ்வாறு இருக்க, காலக்கிரமத்தில், குறித்த மூலமூர்த்தியின் பெயரை மாற்றி வேறு ஒரு தெய்வத்தை எழுந்தருளச் செய்வதும், அதற்குரிய வழிபாடு இயற்றுவதும், மூலமூர்த்தி ஒன்றாக இருக்க அதனை வேறொரு பெயரில் மக்கள் அழைப்பதும் இன்றைய காலத்தில் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்து வருகின்றமை காணக்கூடியதாக இருக்கின்றது.

சில ஆலயங்களில் மூலமூர்த்தி ஒன்றாக இருக்க எழுந்தருளி மூர்த்தி வேறொன்றாக இருக்கின்றது. குறித்த ஒரு ஆலயத்தில் மூலமூர்த்தியாக உள்ள தெய்வம் தவிர்ந்த மற்றைய மூர்த்திகள் எல்லாமே பரிவார மூர்த்தங்களாகும். மூலமூர்த்தியே எழுந்தருளி மூர்த்தியாக இருக்கவேண்டும் என்பது ஆகமவிதி. மூலத்தில் உள்ளது தாழ்ந்த சக்தியாகவும், எழுந்தருளியது சற்று உயர்ந்த சக்தியாகவும் இருப்பின், நாட்டிற்கு பல தீமைகள் ஏற்படுமென ஆகமங்கள் விதிக்கின்றன.

மேலும், மூலமூர்த்தி கருங்கல்லிலான சிலா விக்கிரமாக இருக்க வேண்டும் என்பது ஆகமவிதி. ஆயினும் அவ்விதியினை மரபுரீதியான வழிபாட்டில் இருந்து வந்த ஆலயங்கள் பின்பற்றுவதில் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன. உதாரணமாக, மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயமும் முழுமையான ஆகமமரபில் வருவதில் பல பிரச்சினைகளை எதிர்நோக்கியது. குறிப்பாக, 1927இல் கர்ப்பக்கிரகத்தில் இருந்த மிகச்சிறிய அம்மன் சிலை வெளியே எடுக்கப்பட்டு கருங்கல் விக்கிரகம் வைக்கப்பட்டது. இதனால் ஆலய உரித்தாளர் குடும்பத்திலும், கும்பாபிஷேகம் செய்த அந்தணர் குடும்பத்திலும் ஏற்பட்ட திடீர் இறப்புக்களைத் தொடர்ந்து மீளவும் மூலவிக்கிரகம் எடுக்கப்பட்டு முன்னர் இருந்தபடியே கும்பத்தின் உள்ளே சிறிய விக்கிரகத்தை வைத்து, அதன்மேல் அம்மனின் முகக்களையை வைத்துப் பூசித்து வந்தனர். அதன்பிறகு 1943இல் கர்ப்பக்கிரகத்தில் இருந்த சிறிய விக்கிரகத்தை புதிதாகச் செய்த விக்கிரகத்துடன் இணைத்து தற்போது வரை அந்த விக்கிரகமே மூலஸ்தானத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இங்கு ஆலயத்தின் வெளியீடுகள், நூல்கள் என்பவற்றில் பன்றித்தலைச்சி அம்மன், கண்ணகை அம்மன், கண்ணாம்பிகை என வருவது, சிலப்பதிகாரத்தில், மதுரையை எரித்த பின்னர் இலங்கை வரும் கண்ணகி என்பதுமன்று அல்லது கடல்சூழ் இலங்கை கஜபாகு மன்னர், சேரநாட்டில் இருந்து கொண்டு வந்த கண்ணகி வழிபாடுமன்று, அது சிவசக்தியாக உள்ள பராசக்தியின் ஓர் அம்சமாக உள்ளது. மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் பாரம்பரிய வழிபாட்டு முறையிலிருந்து மாறுபட்டு ஒரு நூற்றாண்டு கடந்து வந்துவிட்டது. ஆனால் அவ்விடத்தின் புனிதத்திற்கும் அருளிற்கும் எந்தக்குறைவும் ஏற்படவில்லை. இம்மாற்றம் பற்றி வழிபடும் மக்களுக்குத் தெரிந்திருக்கவில்லை என்பது இவ்வாய்வினால் தெரியவருகின்றது. ஒவ்வொரு வருடமும் பங்குனி மாதத்தில் வருகின்ற திங்கட் கிழமைகளில் மக்கள் தம் பாரம்பரிய முறையில் அம்மனை நினைந்து பொங்கல், படையல் போன்றவற்றைச் செய்கின்றனர். அவர்கள் அம்முறையில் படைப்பதற்கு, ஆலய முன் மண்டபத்தின் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும், ஆலயத்தின் பிரதான வெளியீடுகள், மற்றும் பத்திரிகைப் பிரசுரங்களில் எல்லாம், இராஜராஜேசுவரி அம்மனின் உருவமே வெளிவருகின்றது. இவ்வாலயத்திற்குரிய ஊஞ்சல் பாட்டு, தோத்திரப்பாட்டு என்பன இராஜராஜேசுவரி அம்மனின் பெயரில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே இவ்வாலயத்தின் பெயர் மரபு ரீதியாக கண்ணகி அம்மன் என்று கூறப்பட்டாலும், உண்மையில் உள்ளது இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயமே.

யாழ்ப்பாணத்து மரபுரீதியாக வழிபடப்பட்ட பெண் தெய்வங்கள் ஆகமமயப்பட்ட நிலையில், மக்கள் தமது மரபுப்பெயரை மறவாது ஆலயங்களுக்குப் பெயர் வைத்துள்ளமையைக் காணலாம். உதாரணமாக புங்குடுதீவு அருள்மிகு

கண்ணகை அம்மன் என வழங்கும் ஸ்ரீ இராஜராஜேசுவரி அம்பாள் ஆலயம், நாயன்மார்கட்டு இராஜராஜேசுவரி என வழங்கும் பேச்சியம்மன் ஆலயம் என்பன குறிப்பிடத்தக்கன.

## சக்திவழிபாடு அல்லது அம்மன் வழிபாடு

பெண் தெய்வ வழிபாட்டின் இன்றைய வளர்ச்சி நிலையாக நாம் குறிப்பிடத்தக்கது சக்தி வழிபாடு அல்லது அம்மன் வழிபாடு. முன்னர் குறிப்பிட்டது போல் இச்சக்தி வழிபாடு மனோன்மணி, புவனேஸ்வரி, இராஜராஜேஸ்வரி என வளர்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சக்தி என்பது இறைவனது செயலாற்றலைக் குறிக்கும். அது சூரியனும், அதனது கதிரும் போல வேறுபடுத்தி அறியமுடியாதது (தாதான்மியம்). அக்கினி ஒன்றாயினும் அதனது காரிய வேறுபாட்டால் பலவாகக் கூறப்படுதல் போலச் சிவசக்தி ஒன்றே விருப்பமாக வரும்போது இச்சை என்றும், செயலாற்றும் போது கிரியை என்றும், அறிவாக வரும்போது ஞானம் என்றும் கூறப்படும். "சக்தி தன் பலவோ? என்னில் தான் ஒன்றே அநேகமாக வைத்திடுங் காரியத்தால்" என்கின்றது சிவஞானசித்தியார். அச்சக்தி கீழ் இறங்கும் நிலையில் பெண்வடிவு கொடுக்கப்படும். ஈஸ்வரன் என்னும் திருநாமம் காரணப்பெயராய் நின்று பிறரையும் உணர்த்தும் காரண இடுகுறிப் பெயராய்ச் சிவபெருமான் ஒருவரையே உணர்த்தும். அதுபோல் ஈஸ்வரி என்னும் பெயரும் உமையம்மையாரையே உணர்த்தும். ஆகவே பரமேஸ்வரி, மகேஸ்வரி, இராஜராஜேஸ்வரி, புவனேஸ்வரி முதலிய நாமங்களும் தேவியாருக்கே உரிய திருநாமங்களாகும். மாணிக்கவாசகர் தமது திருவெம்பாவையில் ஒவ்வொரு சக்தியையும், அதற்குரிய தொழில் வேறுபாட்டையும் விரிவாக விளக்கி உள்ளமை குறிப்பிடத்தக்கது. இச்சக்திகளின் தொழிற்பாட்டு நிலையில் இரண்டாக வைத்து நோக்குவர்.

1. சிவசக்தி
2. கேவல சக்தி அல்லது சுதந்திர சக்தி

சிவசக்தி சிவனுடைய மூர்த்தி பேதங்களுடன் தொடர்புடையது. குறிப்பாக, மனோன்மணி, உமை, மகேஸ்வரி, பார்வதி போன்ற சக்தி பேதங்கள் குறிப்பிடத்தக்கது.

அம்பாளின் சுதந்திர சக்தி என்பது தனித்துவமான அம்சம். சிவத்தின் ஆற்றலுடன் இணைந்து நோக்கப்படுவதில்லை. குறிப்பாகக் காளி, துர்க்கை, இராஜராஜேஸ்வரி என்பவை சுதந்திர சக்தியாகக் கூறப்படும்.

யாழ்ப்பாணத்தல் சக்தி ஒரு திருமுகத்துடனும் இரு கரங்களுடன் அல்லது நான்கு கரங்களுடன் விளங்குவதைக் காணமுடிகின்றது. இருகரமாயின், ஒரு கரம்

தாமரை மலரினை ஏந்தி நிற்கும் மற்றைய கரம் கீழே தொங்கியவாறு அமையும். நான்கு திருக்கரங்களுடன் மனோன்மணியாக விளங்கும் பொது மேலதிகமான இரு கரங்களும் அபயம் வரதமான விளங்கும். இத்திருவுருவமும் பல கோவில்களில் இடம்பெறக் காண்கின்றோம். இவ்வுருவங்கள் இவள் பரதந்திர சக்தியாக, இறைவனின் பரவாத தெய்வமாக விளங்கும் நிலையினைச் சுட்டுகின்றன. நான்கு கரங்களில் பாசம், அங்குசம், வில்லு, அம்பு ஏந்தி நிற்பது சுதந்திர சக்தி ஆகும்.

பெண் தெய்வ வழிபாடுகள் ஆகமமயப்படுத்தலுக்கு உட்படுகின்றபோது முக்கியமாக மூன்று தெய்வங்கள் வழிபாட்டு மரபிற்காகத் தெரிவு செய்யப்படுகின்றன. அவை :-

இராஜராஜேஸ்வரி
மனோன்மணி
புவனேஸ்வரி

இவற்றுள் இராஜராஜேஸ்வரி சுதந்திர சக்தி என்பதுடன், எல்லாச் சக்திகளுக்கும் மூலசக்தியாக இருக்கின்ற ஆதிசக்தியாக இருப்பதனாலும், ஸ்ரீ சக்கரத்தின் பிரதானமான வழிபடுதெய்வமாக இருப்பதனாலும் இத்தெய்வத்தின் பிரதிட்டை என்பது மரபுரீதியாக வழிபட்ட தெய்வத்தைக் கட்டுப்படுத்தும் அல்லது உட்படுத்தி நிற்கும் என்பதனால் இதற்கான பிரதிட்டையை அறிஞர்கள் பிரதானப்படுத்தினர். ஆயினும் அக்காலப்பரப்பில் நிகழ்ந்த மாற்றத்தின் போது மனோன்மணி, புவனேஸ்வரி போன்ற பரதந்திர சக்திப் பிரதிட்சைகளும் நிகழ்ந்தன. சிறுபால் காமாட்சிப் பிரதீட்சையும் நிகழ்ந்தது. ஆனால் ஆலய வரலாறுகள் சரியாகப் பதியப்படாமையாலும், பரம்பரையாக ஒரே குடும்ப அந்தணர்கள் பூசை செய்யாது காலந்தோறும் மாற்றப்படுவதனாலும் ஆலயத்தில் என்ன பிரதிட்சை செய்யப்பட்டுள்ளது என்பதை மக்கள் அறியாது இருந்தனர். இதன் காரணமாக மனோன்மணி அம்மன் பிரதிட்சை செய்யப்பட்ட ஆலயங்கள் பலவும், இராஜராஜேஸ்வரி அம்மனாகவோ அல்லது புவனேஸ்வரி அம்மனாகவோ மாறி அழைக்கப்பட்டது. உண்மையில் தெய்வவடிவங்கள் பற்றிய விளக்கமின்மையும், வழிபடுகடவுள் பற்றிய குழப்பங்களுமே இந்நிலைக்குக் காரணமாயின. உதாரணமாக, சுதுதலை அம்மன் கோயில் மகோற்சவ கால வெளியீடு ஒன்றில், "சக்தி ஒன்றே எனினும் பலவித நாமரூபங்களில் அழைக்கப்படுகின்றாள்" எனும் வாக்குக்கிணங்களும், அன்னை "புவனேஸ்வரி பீடம்" என்று புகழ்பூத்த நயினையில் புவனேஸ்வரி, நாகபூஷணி எனுந் திருநாமத்துடனும், சுதுமலையில் ஆதியில் கண்ணகி பின் படிமுறையாக ராஜராஜபுரியம்மன், பருவதபத்தினி எனவும் பின் மனோன்மணி எனவும் பல நாமங்களுடன் விளங்கினாலும் நூற்றாண்டு காலமாக புவனேஸ்வரியம்மன் என்றே அழைக்கப்பட்டு வருகின்றமை அனைவரும் அறிவர்" என சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் மீது ஸ்ரீ புவனேஸ்வரீ அஷ்டகம் பாயடி

சிவஸ்ரீ. பூரண தியாகராஜக் குருக்கள் தனதுரையில் எழுதியுள்ளதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

இந்நிலையில் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பிரபலமாகவுள்ள மூன்று சக்திகளினது விக்கிரகவியல் தோற்றம் எவ்வாறு இருக்கும் என்பதை நோக்குவது இங்கு பொருத்தமானது.

**இராஜராஜேஸ்வரி**

இவள் லலிதாதேவியைப் போன்றே திருவுருவம் உடைய, இவளது மூலமந்திரம் 28 எழுத்துக்கள் கொண்ட மகாஷோடகி எனப்படும். ஸ்ரீவித்யையே இப்படிவங்களுக்கு எல்லாம் உரிய பொதுவான சாஸ்திரமாகும். இராஜராஜேசுவரி ஞானத்தின் முடிவு அல்லது நிறைவைக் குறிக்கின்றாள். இவள் 60 வயதினள். சித்திரை மாதத்தில் வரும் வசந்த நவராத்திரி விழா இராஜராஜேசுவரிக்கு மிகவும் சிறப்பானதாகும். மாதுளம்பூவைப்போன்ற சிவப்பு நிறம், மூன்று கண்கள், பாலச்சந்திரனுடன் கூடிய மகுடம் மற்றும் நான்கு கரங்களிலும் பாசம், அங்குசம், கருப்புவில், புஷ்பபாணம் என்பவற்றை உடைய இராஜராஜேஸ்வரி மஞ்சள்நிறமான பட்டாடை அணிந்திருப்பவள்.

**புவனேஸ்வரி**

தேவிபாகவதம் என்னும் நூலில் மிகவும் புகழ்ந்து போற்றப்பெறும் புவனேஸ்வரி என்பது உலகங்கட்கெல்லாம் ஐசுவரியத்தைக் கொடுப்பவள் என்று பொருள்படும். புவனேசுவரி என்னும் திருநாமத்தோடு மும்மூர்த்திகளும் முத்தொழில் செய்வதற்கு அதிகாரம் கொடுத்தருளுகின்றாள். உதயசூரியன் போன்ற ஒளிநிறம் உடையவள் தாமரை மலரில் வீற்றிருப்பவள் திருமுடியில் பிறையும், காதுகளில் தோடு முதலிய அணிகலன்களும் தரித்தவள் தனது நான்கு கைகளிலும் முறையே பாசம், அங்குசம், அபயம், வரதம் என்பவற்றைக் கொண்டவள் சக்தி வழிபாட்டின் தலைமைத் தெய்வம் புவனேசுவரியே ஆவள். ஸ்ரீவித்தையின் பஞ்சதசாட்சரி மந்திரம் இவளுக்கு உரியது. இவளது ஓரெழுத்து மந்திரத்தை உச்சரிப்போர் முற்றுணர்வும் பேரின்பமும் எய்துவர் என்று சொல்லப்படுகின்றது.

**மனோன்மணி**

மனோன்மணி, சந்திரனின் நிறம் வாய்ந்தவள். இவளுக்கு மூன்று கண்கள் உண்டு. தலையைச் சடாமகுடம் அழகுறுத்தும் நான்கு திருக்கரங்களில் பின் வலக்கரம் தாமரையைத் தாங்கும் பின் இடக்கரம் தொங்கி நிற்கும். முன்னுள்ள வலக்கரமும், இடக்கரமும் அபயவரத கரங்களாக அமையும். மனோன்மணியை விஸ்வகர்ம சாஸ்திரத்தில்,

நீலதாம்ராருண பாஸா ப்ருது வக்தாமநோந்மநீஃ
கபாலகட்கிணாம் பூத்யை சத்ரூணாம் பயவர்த்தநீ

அதாவது நெய்தற் பூவென ஒளிர்வாள் ஒவ்வொருவரின் ஆன்ம பக்குவமறிந்து மகேசனுக்குப் பரிந்துரைப்பாள் கபாலமும் குறுவாளும் ஏந்தி அல்லாதார்க்கு அச்சம் விளைப்பாள். இவளை "மநோந்மநீ" என அறிக எனக் குறிப்பிடப்படுகின்றது. மனோன்மணி, பக்குவம் எய்திய உயிர்களை மலத்தினின்று நீக்கி சிவத்துடன் சேர்க்கும் தொழிலைச் செய்யும்.

இனி, இச்சக்திகளில் உள்ள ஆயுதங்களின் பிரதானமான செயற்பாட்டை நோக்குவோம்.

**பாசம்**

பகைவர்களின் கைகளையும் கால்களையும் கட்டப்பயன்படுவது. ஒன்று இரண்டு மூன்று கயிறுகள் சேர்ந்து எளிதில் அவிழக்கூடியதாக அமையும். (நார்வகையில் அமைவதும் உண்டு). நாகங்களே கயிறு போன்று பின்னிக்கொண்டு கரங்களில் திகழ்வது ஒருமுறை. அதற்கு நாசபாசம் எனப்பெயர்.

**அங்குசம்**

இது இரும்பாற் செய்யப்பெற்ற வளைந்த மூக்கும் குத்தியடக்கக்கூடிய ஒரு கூரிய நேரான பகுதி உடையது. நீளமான கழிகளிற் செருகப் பெற்றிருக்கும். யானையை அடக்க உதவும் கருவி. அடங்காமல் திரியும் மனத்தினை அடக்கி அமைதிநெறியில் செல்வதற்காக அமைந்த கருவி.

**அட்சமாலை (ஜபமாலை)**

உருத்திராக்க மணிகள் (காய்கள்), ஸ்படிகமணிகள், தாமரைக்காய் மணிகள், இவைகளைக் கொத்து அணிவதும் அல்லது ஜபம் செய்யக் கரங்களில் வைத்துக் கொள்வதும் உண்டு. 108 மணிகள் ஐம்பத்து நான்கு மணிகள் என்ற முறையில் அட்சயமாலை அமைப்பது உண்டு. யோகிகள், தட்சினாமூர்த்தி, சரஸ்வதி முதலானோர் கரங்களில் திகழும். பழமையான திருவுருவங்களில் ஓர் ஆயுதம் போல அமைந்திருந்தது.

**பத்மம்**

சிரசில் சகஸ்ரதளம் என்னும் ஆயிரம் இதழ் தாமரை உள்ளது என்று யோகிகள் கூறுவர். தாமரையினை ஞானத்திற்கு ஒப்பிடுவர். இது இறைத்திருமேனிகள் கரங்களிலும் ஆசனமாகவும் அமைந்து விளங்கும். இதில் வெண்தாமரை செந்தாமரை என இருவகை உண்டு. உத்தமமான பூக்களில் சிறந்தது இதுவேயாகும்.

**அபயகரம்**

கையின் சுட்டுவிரல், நடுவிரல் அணிவிரல் சிறுவிரல் ஆகிய நான்கினையும் ஒருசேர அமைத்து கைக்குச் சம உயரத்தில் மேல்நோக்கி செங்குத்தாக நிறுத்தி, பெருவிரலைச் சுட்டுவிரலுடன் சேர்த்து மேல்நோக்குமாறு அமைத்துப் பிடிக்கும் கரலட்சணத்திற்கு அபயகரம் என்று பெயர். அதனை அருட்கரம் என்றும் கூறுவர்.

**வரதகரம்**

முற்கூறிய அபயகரத்தை கீழ்நோக்கியவாறும் உள்ளங்கை வெளிநோக்கிய வாறும் அமைத்துக் காட்டினால் அது வரதகரமாகும். வரதகரம் கொடுக்கும் (செல்வம்) கரமாகும்.

**கருப்புவில்**

இது அம்பு எய்யப் பயன்படுவது. இதனது அம்பு புஷ்பபணமாகும்.

**புஷ்பபாணம்**

இது கரும்புவில்லை வளைத்து அதிகல் எறியப் பெறும் கருவி. (பொதுவாக அம்பின் தலைப்பகுதி கூர்மையாக, நுனி இரும்பினாலும் அடிப்பகுதி கழியிற் செருகியும் வைத்திருப்பவர். தாமரை, அசோகு, மா, முல்லை, நீலம் என்ற ஐந்து பூக்களாலியன்ற பணம் இவற்றை மன்மதன் மக்களிடத்துக் காமநினைப்பூட்ட எய்வான். போகநிலையில் மற்றத் தெய்வங்களும் தாங்குவதுண்டு.

**முடிவுரை**

இலங்கையின் பெண் தெய்வ வழிபாடானது புராதன காலத்தில் இருந்தே நிலவி வருகின்றது. இவ் வழிபாடுகள் ஆகமம் சார்ந்த சாஸ்திரிய மரபிலும், ஆகமம் சாராத மரபிலும் அமைந்திருந்தன. வரலாற்று ரீதியாக நோக்கும்போது, ஆகமம் சாராத பெண் தெய்வ வழிபாடுகள் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை, ஆகம மயப்படுத்தலுக்கு உட்பட்டதாக அறியமுடியவில்லை. ஆயினும், ஆறுமுகநாவலரின் சமய சீர்திருத்த முயற்சியினால் பல பெண் தெய்வ வழிபாடுகள் ஆகமமயப்படுத்தலுக்கு உட்பட்டு, ஆகமங்களில் கூறப்படும் தெய்வங்களாக மாற்றப்பட்டன. குறிப்பாக, யாழ்ப்பாணத்தில் இருந்த கண்ணகி வழிபாடுகளில் பெருமளவு ஆகமமயப்படுத்தப்பட்ட நிலையில் மனோன்மணி அல்லது இராஜராஜேஸ்வரி அல்லது புவனேஸ்வரியாக மாற்றப்பட்டுள்ளன. இவற்றுள் இராஜராஜேஸ்வரி சுதந்திரசக்தி என்ற வகையில் அவ் வழிபாடு மிகப்பிரபல்யமடைந்து வருகின்றது. இவ்வாறு பெண் தெய்வ வழிபாடு ஆகம மயப்படுத்தலுக்கு உட்பட்டிருந்தாலும், அவ்வாறான ஆகமமயப்படுத்தலும் முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாதவாறு மக்களின் பக்தி வழிபாடு அல்லது நம்பிக்கை மேலோங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும், இவ்வாறான

ஆகமமயப்படுத்தலினால் மரபுரீதியாக வழிபடப்பட்ட கண்ணகி போன்ற தெய்வங்கள் மாற்றப்பட்டு ஆகமமரபிலான தெய்வம் வழிபடப்படுகின்றமை பற்றி பெருமளவான மக்கள் அறிந்திருக்கவில்லை என்பதுடன், அவர்கள் காலம் காலமாக தமது முன்னோர்கள் மேற்கொண்ட வழிபாட்டு முறையான பொங்கல், படையல், குளிர்த்தி போன்றவற்றைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக, அவர்கள் தமது இஷ்ட சித்திகளையும் பெற்றுவருகின்றனர். ஆகம ரீதியான மாற்றங்களை மேற்கொள்கின்ற போது அம்மாற்றம்பற்றிய முழுமையான விளக்கம் அதனைப் பரிபாலித்து வருபவர்களிடையே சொல்லப்பட்டு வராமையினாலும், விக்கிரவியல் பற்றிய போதிய தெளிவின்மையாலும் காலத்துக்குக் காலம் தெய்வத்தின் பெயர்கள் மாறிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

திருச்சிற்றம்பலம்


**மங்கையோர் கூறுகந் தேறுகந்தேறி**
**மாறலார் திரிபுரம் நீறெழச்செற்ற**
**அங்கையான் கழலடி யன்றி மற்றறியான்**
**அடியவர்க்கடியவன் தொழுவன் ஆரூரன்**
**கங்கையார் காவிரித் துருத்தியார்வேள்விக்**
**குடியுளார் அடிகளைச் சேர்த்தியபாடல்**
**தங்கையால் தொழுதுதம் நாவின் மேற்கொள்வர்**
**தவநெறி சென்றமர் உலகம் ஆள்பவரே.**

திருச்சிற்றம்பலம்

– 7ம் திருமுறை – சுந்தரமூர்த்தி நாயனார்

உ

"வேலுண்டு வினையில்லை"



தெல்லிப்பழை

# அருள்மிகு குருநாதசுவாமி கோவில்

# அலங்கார உற்சவம் - 2018

| ஆரம்பம் | நிறைவு |
|---|---|
| 01-07-2018 | 12-07-2018 |

# திருவருள்மிகு குருநாதசுவாமி கோவில்
## தெல்லிப்பழை
## தல வரலாறு

### ஆலயத்தின் அமைவிடமும் தோற்றமும்

சிவபூமியாம் ஈழநாட்டின் சிரசு என விளங்கும் யாழ்ப்பாணத்தின் வடபால் உள்ள பழம்பெரும் பகுதிகளுள் முதன்மையான தெல்லிப்பழையின் கிழக்குப் பகுதியில் தமிழ்க்கடவுளாம் முருகனுக்குரிய தனிப்பெரும் ஆலயமாகத் திகழ்வது குருநாதசுவாமி கோவிலாகும். வன்னி, கடம்பு, அரசு, இலுப்பை, வேம்பு, மா, தேக்கு, பலாசு முதலான பல்வேறு பயன்தரு மரங்கள் வளர்ந்து சோலையாக உள்ள தலத்தின் மூலமூர்த்தியாக ஞானப்பழமான பழநியாண்டவர் வீற்றிருப்பது சிறப்பாகும்.

கிழக்கு நோக்கிய கருவறைக்கு வடபுறத்தே கந்தனுக்குரிய கடம்பும், தென்புறத்தே விநாயகருக்குரிய வன்னியும், நேர் பின்னாக மேற்குத் திசையில் ஆலய எல்லைக்கு அருகில் பாரிய அரசம், கிழக்குத் திசையில் எல்லைக்கு அருகில் ஓங்காரவடிவில் கிளை கொண்ட மாமரமும் அமைந்து இவ் ஆலயத்திற்கு பெருமையும், அழகும் சேர்க்கின்றன. வேப்பமரத்தைப் பின்னணியாகக் கொண்டு சபையும், ஈசானத்தில் வைரவமூர்த்திக்கு ஆலயமும் அதன் பக்கலில் வானளாவ உயர்ந்த அழகிய மணிக்கோபுரமும் ஆலய தம்பீர தோற்றத்திற்கு கட்டியம் கூறிநிற்கின்றன.

வலிகாமம் வடக்கு பிரதேச செயலகப்பிரிவில் தந்தை செல்வாபுரம் (J/230) கிராம உத்தியோகத்தர் பகுதியில் யாழ் – காங்கேசன்துறை பிரதான வீதியில் இருந்து 150m தூரத்தில் வீதிக்கு மேற்கில் மகிழடி ஒழுங்கையில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

### ஆலயத்தின் ஆரம்ப வழிபாடு

இவ்வாறான சிறப்புக்கள் பலவும் கொண்ட இவ் ஆலயத்தின் வரலாற்றைச் சிறிது நோக்கின், ஏறத்தாழ இருநூறு வருடங்களுக்கு முன் "நல்லன்சீமா" என்று அழைக்கப்பட்ட காணிக்குள் ஒரு புளியமரத்தின் கீழ் வீரசைவர் வம்சத்தைச் சேர்ந்த "குருநாதர்" என்னும் திருநாமம் உடைய முருக பக்தர் ஒருவர் வேலாயுதம் ஒன்றை வைத்துவழிபட்டுவந்தார். மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலின் திருப்பணிக்காக இப்புளியமரம் தேவைப்பட்டதால் உரிய பூசை வழிபாடுகளுடன் அதனைத் தறித்துமாவிட்டபுரத்திற்கு அனுப்பப்பட்டது. அதன் பின்னர் பக்கத்தில் உள்ள "தேற்றாவடி" என அழைக்கப்பட்ட காணிக்குள் மண்ணினால் அமைக்கப்பட்ட கொட்டகையில் அவ்வேல் வைத்துப் பூசிக்கப்பட்டுவந்தது.

அக்காலத்தில் ஆறுமுகம் திருச்சிற்றம்பலம் என்பவரும் அவரதுமனைவி சிதம்பரவல்லியும் புத்திரபாக்கியம் வேண்டி அவ்விடத்தில் வெள்ளைக் காட்டுக்கல்லில் விநாயகர், நாகதம்பிரான் என்பவற்றை ஸ்தாபித்து வைதிக அந்தணர் ஆகிய இராமலிங்க ஐயர் முத்துக்குமாரசாமிக் குருக்களைப் பூசைக்கு அமர்த்தினர். நாளுக்கு ஒருவராக ஏழுநாட்களுக்கும் உபயகாரர் ஏற்படுத்தப்பட்டு பகல் ஒரு நேரம் மட்டும் நைவேத்தியப் பூசையாக நடைபெற்றுவந்தது. இது இவ்வாறிருக்க மேற்படி சிதம்பரவல்லியின் தந்தையார் காசிநாதர் பொன்னம்பலமும் அவரது சகோதரி சின்னக்குட்டிப்பிள்ளையும் பின்னவருக்கு அப்போது உரித்தாகவுள்ள "நல்லன்சீமா" என்ற பெயருடைய காணிக்குள் சைவ ஆகம விதிகளுக்கு அமைவாக கருவறை, அர்த்தமண்டபம் ஆகியவற்றை வெள்ளைக் கற்களால் அமைத்து கருவறைக்கு மூடு சாந்தும் இடுவித்தனர். அவர்கள் மிகுதி வேலைகள் முடிந்து குடமுழுக்கு நிறைவேறுமுன் பரகதி அடைந்ததாகக் கூறப்படுகின்றது. அதன் பின்னர் கோவில் அமைந்துள்ள காணியின் உரிமையாளர் ஆகிய தெ.ச.துரையப்பா அவர்களும் மைத்துனர் அம்பலவாணர் அவர்களும் ஒருமித்து ஆலயத் திருப்பணிகளைப் பூர்த்தியாக்கிக் குடமுழுக்குச் செய்யத் தீர்மானித்தனர். இதற்காக காங்கேசன்துறையில் அமைந்துள்ள கோவிலுக்கென இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட தண்டாயுதபாணி விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்படாதிருப்பதை அறிந்து அதற்குரிய பெறுமதியைக் கொடுத்து அதனைப் பெற்றுக்கொண்டனர்.

1921ம் ஆண்டளவில் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோவில் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ சு. வைத்தியநாதக்குருக்களால் குடமுழுக்கு சிறப்பாக நடத்தப்பட்டது. 1924ம் ஆண்டு பஞ்சலோகத்தினாலான விநாயகர், முத்துக்குமாரசாமி ஆகிய விக்கிரகங்கள் ஆறுமுகம் திருச்சிற்றம்பலம் அவர்களால் செய்விக்கப்பெற்று வண்ணை வைத்தீஸ்வர ஆலயப் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ. சு. வைத்தியநாதக் குருக்களால் குடமுழுக்கு செய்யப்பட்டது. 1928ம் ஆண்டளவில் ஆலயத்திற்குத் தேவையான உள்வீதி, வெளிவீதிகளுக்கான காணிகளைத் தருமசாதனமாக சங்கரப்பிள்ளை துரையப்பா, கந்தவனம் முத்துக்குமாரு, ஆறுமுகம் திருச்சிற்றம்பலம், பொன்னம்பலம் அம்பலவாணர் ஆகியோர் ஒன்றுசேர்ந்து ஆலயத்தின் பெயரால் கையேற்று உறுதிமுடிக்கப்பட்டது.

### ஆலயத்திருப்பணிகள்

கந்தவனம் முத்துக்குமாரு, பொன்னம்பலம் அம்பலவாணர், துரையப்பா பொன்னம்பலம், திருச்சிற்றம்பலம் சுந்தரமூர்த்தி ஆகிய நால்வரும் தங்களாலும் தங்கள் முன்னோராலும் ஆதரிக்கப்பட்ட மேற்படி ஆலயத்தையும் அதற்குச் சொந்தமாக உள்ள அசைவுள்ள பொருட்களையும், அசைவற்ற ஆதனங்களையும் தருமசாதனமாக 1941 ஜனவரியில் 4ம் திகதி முன்னாள் பிரசித்த நொத்தாரிசு திரு.க.இ.தம்பி அவர்களால் உறுதிமுடித்துக்காணிக்கந்தோரிலும் பதிவு செய்வித்தனர். இந்நால்வருடன் மேலும் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட "பழநியப்பன் திருத்தொண்டர் திருவகுப்பு" என்ற பரிபாலன

சபையும் அமைக்கப்பட்டது. 1941ல் கோவிலின் தென்மேற்குப் புறமாக கோவில் அர்ச்சகர் வசிப்பதற்கு காணி கொள்வனவு செய்யப்பட்டு நிரந்தரமாக ஒரு புதிய வீடும் அமைக்கப்பட்டது. 1945 தை மாதம் மூல நட்சத்திரத்தில் சுன்னாகம் சிவஸ்ரீ.க.சுந்தரேசக்குருக்களால் குடமுழுக்குச் செய்யப்பட்டது. 1948 முதல் பிரம்மஸ்ரீ வை.சதாசிவ ஐயர் அவர்கள் ஆலய அர்ச்சகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆரம்பகாலத்தில் வைரவர் மகா மண்டபத்தின் ஈசான மூலையில் வைத்து வழிபடப்பட்டு வந்தார். பின்னர் 1949ல் திரு.க.அய்யாத்துரை குடும்பத்தினர் ஆலயத்தின் வடகீழ் மூலையில் அரச மரத்திற்கு கீழ் தனிக்கோவில் அமைத்து கும்பாபிஷேகம் செய்வித்தனர். சிங்காரவேலருக்கு கருவறையின் மேற்குப்புறச் சுவருடன் இணைந்ததாக மேற்கு நோக்கிய சந்நிதி அமைத்து கும்பாபிஷேகம் செய்வித்தவர் திரு.மு.சின்னப்பா ஆவார். திரு.ம.அ.நாகலிங்கம் அவர்கள் 1928ல் கண்டாமணியுடன் கூடிய மணிக்கோபுரத்தை அமைத்துள்ளார்.

ஆலயத்தின் தம்ப மண்டபம், தரிசன மண்டபம் ஆகியவற்றின் தளத்திற்கு சீமெந்துக்காறை இடல், கூரைக்கு கன்னார்கூரைத்தகடு (Asbestos Sheet) பொருத்துதல் போன்ற திருப்பணிகளை சுன்னாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு.சு.சண்முகம் 1953–1954ல் தனது உபயமாகச் செய்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து 15 உறுப்பினர்களைக் கொண்ட திருப்பணிச்சபை 1989ல் குகனடியார்களால் தெரிவு செய்யப்பட்டது. இதன்தலைவராக ஐயாத்துரை சண்முகநாதன் தேர்ந்தெடுக்கப்பட்டார். இச்சபையின் விடாமுயற்சியின் பயனாக 21–04–1989ல் ஆலய பாலஸ்தாபன குடமுழுக்கு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ. இ. சுந்தரேஸ்வரக் குருக்கள் அவர்களால் நிறைவேற்றி வைக்கப்பட்டது. பாடசாலை மாணவர்கள், ஆலயத்தைச் சூழவிருந்த குகனடியார்கள் ஆகியோரின் மிகுந்த ஒத்துழைப்புடன் சிரமதான முறையில் பழைய கட்டிடங்களை அகற்றல், துப்புரவு செய்தல், அத்திபாரம் அகழ்தல் போன்ற வேலைகள் நடைபெற்றன. புனரமைக்கப்படும் ஆலயத்திற்கான அடிக்கல்நடல், சங்குஸ்தாபனம் என்பன 06–05–1989ல் திரு.தி. சுந்தரமூர்த்தி அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. ஆலய கட்டுமானத்திற்குத் தேவையான வெள்ளைக்கற்களை பொழியும் வேலை மல்லாகம் திரு.சி.பாலசிங்கம் குழுவினரிடமும் ஆலய கட்டிட நிர்மாண வேலைகள் அராலி திரு.வி. கனகரத்தினம் ஆசாரியாரிடமும் வழங்கப்பட்டது.

**ஆலயத்தின் இருண்டகாலம்**

1990 யூன் மாதத்தில் நாட்டின் அரசியல் சூழ்நிலை மாறியதுடன் வலிவடக்கைச் சேர்ந்த பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்தனர். இக்காலத்தில் சீமெந்து உற்பத்தி நிறுத்தப்பட்ட காரணத்தினால் கோவில் கட்டுமானப்பணிகள் தடைப்பட்டன. 1990 யூன்

வரை நடைபெற்ற வேலைகளாக கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், சிங்காரவேலர் சந்நிதி ஆகியன வியாழவரி வரை கட்டப்பட்டமை, பிள்ளையாருக்கு தனிக்கோவில் நிர்மாணிக்கப்பட்டு தூபியும் அமைக்கப்பட்டிருந்தமை, சந்தானகோபாலருக்கான ஆலயக் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை என்பவற்றைக் குறிப்பிடலாம். திருப்பணிகள் தடைப்பட்டிருப்பினும் நித்திய பூசைகள் தொடர்ந்து நடைபெற்று வந்தன. ஆனால் மீண்டும் 30-05-1992 அன்று நடைபெற்ற காலைப் பூசைக்குப் பின் குருநாதப்பெருமானுக்கு ஏறத்தாழ ஏழு ஆண்டுகளுக்கு பூசை வழிபாடுகள் ஏதும் நடைபெறவில்லை.

1996 மீள் குடியமர்வை அடுத்து நிலைமை மோசமாகியது. கோயில் உடைமைகள் யாவும் களவாடப்பட்டன. உடைமைகளைச் சூறையாடிய கயவர் கூட்டம் விக்கிரகங்களிலும் கைவைக்கத் தொடங்கியது. ஐம்பொன்னாலான எழுந்தருளி விநாயகர், வெள்ளிக்கிழமை தோறும் வீதிவலம் வந்து அருள்பாலிக்கும் வள்ளி தெய்வயானை சமேத ஆறுமுகசுவாமி, ஐம்பொன்னாலான சூலம் (காளி தேவி) என்பன களவாடப்பட்டிருந்தன. கலையம்சம் நிறைந்து அழகிய திருவுருவத்துடன் மூலமூர்த்தியாக விளங்கிய பழநியாண்டவரின் தண்டாயுதம், அதனைத் தாங்கியிருந்த திருக்கரம் என்பன ஈனர்களினால் பின்னபடுத்தப்பட்டிருந்தன. வாகனங்கள், திருவாடு தண்டுகள் மற்றும் மரத்தளபாடங்கள் என்பன செல்லரித்துப் போயிருந்தன. அத்துடன் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தன பழநியாண்டவரின் வெள்ளியங்கி உட்பட கோயில் உடைமைகள் யாவும் காணாமல் போயிருந்தன.

குகனடியார்கள் சிலர் கோயிலின் நிலை கண்டு எஞ்சியிருந்த விக்கிரகங்களைப் பேணிப்பாதுகாக்கும் நோக்குடன் வார்ப்புத் திருவாசியுடன் கூடிய முத்துக்குமாரசுவாமி, அஸ்திர தேவர் ஆகியோரை 27-04-1999ல் தெல்லிப்பழை காசிவிநாயகர் தேவஸ்தானத்திற்கு இடம்மாற்றினர்.

**மீள் புனருத்தாரணம்**

நாட்டு நிலைமையில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து கோவிலில் மீண்டும் பூசைகளைத் தொடர்ந்து நடாத்தும் பொருட்டும், திருப்பணிகளை முன்னெடுக்கும் நோக்கோடும் குருநாதரின் தொண்டர்களில் ஒரு சிலர் சிரமதானப்பணி மூலம் ஆலயத்தைத் துப்புரவு செய்யும் பெரும் வேலைத்திட்டத்தை 01-10-1999ல் முன்னெடுத்தனர்.

பாரிய இடர்ப்பாடுகளின் மத்தியிலும் குருநாதர் திருவருள் மூலம் சிறப்பாக நடைபெற்ற இப்பணி 30-10-1999ல் ஓரளவு நிறைவடைந்தது. 1989ல் அமைக்கப்பட்ட திருப்பணிச்சபை உறுப்பினர்கள் சிலர் காலமாகியிருந்த காரணத்தாலும் சில

உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்திற்கு வெளியே இருந்த காரணத்தாலும் புதியவர்கள் தெரிவு செய்யப்படவேண்டிய தேவை ஏற்பட்டது. இதனால் 31-10-1999ல் ஆலய மண்டபத்தில் பொதுக்கூட்டம் கூடப்பட்டு ஆலயத் திருப்பணிச்சபை புனரமைக்கப்பட்டது. புத்தூக்கம் பெற்ற திருப்பணிச்சபையின் முயற்சியினாலும் குருநாதப்பெருமானின் துணையுடனும் 19-11-1999 அன்று நடைபெற்ற பிராயச்சித்த அபிஷேகத்துடன் மீண்டும் நித்திய பூசைகள் ஏறத்தாழ ஏழு ஆண்டுகளின் பின் ஆரம்பிக்கப்பட்டன.

### ஆலயத்தின் தற்போதைய நிலையும் விபரங்களும்

பழைய ஆலய மகா மண்டபத்தின் தென்மேற்கு மூலையில் ஸ்தாபிக்கப்பட்டு இருந்த விநாயகருக்கு உட்பிரகாரத்தில் காலஞ்சென்ற நாகமணி குடும்பத்தினரின் உபயத்தில் தனிக்கோயில் அமைக்கப்பட்டது. சபா மண்டபம் இல்லாத குறையை நிவர்த்தி செய்ய எழுந்தருளி விக்கிரகங்களுக்கென சபை அமைப்பதை திரு.தி.சுந்தரமூர்த்தி குடும்பத்தினர் தமது உபயமாக ஏற்றனர். சிங்காரவேலருக்கான சந்நிதி திரு.சி.புஷ்பநாதன் குடும்பத்தினரின் உபயமாக நிர்மாணிக்கப்பட்டது. ஆலயத்தின் மேற்கெல்லையில் அரசமரத்திற்குக் கீழ் வழிபட்டு வந்த சந்தானகோபாலர், நாகதம்பிரான் ஆகியோருக்கு உள் வீதியில் பிள்ளையார் கோவிலுக்கு அருகில் சந்நிதி அமைத்து அதற்கான கும்பாபிஷேகச் செலவையும் மல்லாகத்தைச் சேர்ந்த கதிர்காமு சண்முகானந்தம் ஏற்றுக்கொண்டார். மேலும் மணிக்கோபுரத்தை திரு.தி. அருமைநாயகம் குடும்பத்தினரும் மடைப்பள்ளியை தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தினரும், தெற்கு வாசல் கொட்டகையை காலஞ்சென்ற இ.பொன்னையா குடும்பத்தினரும் தமது உபயமாக அமைத்துக் கொடுத்துள்ளனர்.

முன்னைய விநாயகர் சிலை சிறியதாக இருந்தமையால் மூலாதாரப் பிள்ளையாராக பிரதிஷ்டை செய்யப்பட்டது. புதிய விநாயகர் சிலாவிக்கிரகம் கொழும்பிலிருந்து சிவஸ்ரீ. இ. சுந்தரேஸ்வரக் குருக்கள் மூலம் தருவிக்கப்பட்டது. சேதமாக்கப்பட்ட மூலமூர்த்திக்குப் பதிலாக புதிய பழநியாண்டவர் விக்கிரகம் இந்தியாவின் மாமல்லபுரத்திலிருந்து சிவஸ்ரீ. கு. நகுலேஸ்வரக் குருக்களின் உதவியுடன் பெறப்பட்டது. உற்சவ மூர்த்தியாகிய விநாயகர் விக்கிரகத்தை ஆலய அர்ச்சகர் பிரம்மஸ்ரீ. ச.யோகேஸ்வரசர்மா தமது உபயமாக வழங்கியுள்ளார். மேலும் மயிலுடன் கூடிய வள்ளி தெய்வானை சமேத ஆறுமுக சுவாமியின் ஐம்பொன்னினால் ஆன விக்கிரகம் பிரதிஷ்ட செய்வதை திரு.ம.பொன்னம்பலம் தனது உபயமாக ஏற்றுக்கொண்டார். இவை தவிர வெள்ளிக்கிழமை உற்சவத்திற்கென திருவாசியுடன் கூடிய வள்ளி தெய்வானை சமேத முத்துக்குமாரசுவாமி விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறாக எழில்பெற அமைக்கப்பட்ட ஆலயத்திற்கு 18-06-2003ல் கும்பாபிஷேகம் செய்வது எனத் தீர்மானிக்கப்பட்டு கும்பாபிஷேகக் கிரியைகள் யாவும்

16-06-2003ல் ஆரம்பமாகின. இதற்கு முன்னரான 14-06-2003ல் நூதன மூர்த்திகள் யாவும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தானத்திலிருந்து ஊர்வலமாக ஆலயத்திற்கு கொண்டுவரப்பட்டனர். விநாயகர், பழநியாண்டவர், ஆறுமுகசுவாமி, சிங்காரவேலர், வைரவர் ஆகியோருக்குத் தனித்தனியாக யாகசாலை அமைத்து சுபானு வருடம் ஆனி மாதம் 4ம் நாளில் சிவஸ்ரீ. இ. சுந்தரேஸ்வரக் குருக்கள் பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடாத்தி ஆசியும் வழங்கினார்.

மயில், குதிரை, ஆட்டுக்குடா, தேர் ஆகிய பெரிய வாகனங்கள் ஆலயத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளன. மேலும் ஆட்டுக்கடா, மயில், கேடகம் ஆகிய சிறிய பழைய வாகனங்கள் திருத்தப்பட்டு பாவிக்கப்படுகின்றன. புதிய சூரபன்மன் செய்விக்கப்பட்டுள்ளது. புதிய வசந்தமண்டபம் பொன்னம்பலம் கலாதேவி குடும்பத்தினரால் அமைக்கப்பட்டுள்ளது. உள்வீதி சுற்றுமதில் அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்துடன் இணைந்த காணியில் இருந்த குருக்கள் இல்லம் மீளக் கட்டியமைக்கப்பட்டுள்ளது.

மாவை நவனீதகிருஷ்ண பாரதியாரால் இயற்றப்பட்ட இரு ஊஞ்சற் பதிகங்கள் தெல்லிப்பழை குருநாதசுவாமி பேரில் உள்ளன. 2003இல் மஹா கும்பாபிஷேக மலர் வெளியிடப்பட்டுள்ளது.

## திருவிழாக்களும் உற்சவங்களும்

### தைப்பொங்கல்

தை மாதப் பிறப்பன்று ஸ்நபன அபிஷேகம், விஷேட பூசை என்பன நடைபெற்று அருள்மிகு முத்துக்குமாரசுவாமி திருவீதியுலா வந்தருளுவார்.

### தைப்பூசம்

தைமாதப் பூச நட்சத்திரத்திலே ஸ்நபன அபிஷேகம், விஷேட பூசை என்பன நடைபெற்று அருள்மிகு முத்துக்குமாரசுவாமி திருவீதியுலா வந்தருளுவார். குகனடியார்களின் பாற்குட பவனியும் நடைபெறும்.

### சிவராத்திரி

மாசிமாத அபரபக்க சதுர்த்தசியன்று இரவு உருத்திர அபிஷேகம், அபிஷேகம், விஷேட பூசை போன்றன நடைபெறும்.

### பங்குனி உத்தரம்

பங்குனிமாத உத்தர நட்சத்திரம் பிரதான உற்சவமூர்த்தியான அருள்மிகு முத்துக்குமாரசுவாமிக்கு ஸ்நபன அபிஷேகம், விஷேட பூசை, ஊஞ்சல் என்பன நடைபெற்று திருவீதியுலா நடைபெறும்.

#### புதுவருடப் பிறப்பு

சித்திரை வருடப்பிறப்பன்று ஸ்நபன அபிஷேகம், விஷேட பூசை என்பன நடைபெற்று அருள்மிகு முத்துக்குமாரசுவாமி திருவீதியுலா வந்தருளுவார்.

#### சித்திரைச் சித்திரை (சித்திரைக் கஞ்சி)

குகனடியார்கள் அனைவரும் ஆலயத்தில் கூடி தாம் கொண்டுவந்த பொருட்களைப் பயன்படுத்தி சோறு, கறி சமைத்து கஞ்சி காய்ச்சி குருநாதருக்கு படைப்பர். சித்திர குப்தர் கதை படிக்கப்படும். ஈற்றில் மகேஸ்வர பூசை நடைபெறும்.

#### வைகாசி விசாகப் பொங்கல்

வைகாசி மாத விசாக நட்சத்திரத்திலே குகனடியார்கள் குருநாதப் பெருமானுக்கு பாங்கிப் படைப்பர். ஸ்நபன அபிஷேகம், விஷேட பூசை என்பன நடைபெற்று அருள்மிகு முத்துக்குமாரசுவாமி திருவீதியுலா வந்தருளுவார்.

#### அலங்காரத் திருவிழா

2003ல் நிகழ்ந்த மஹா கும்பாபிஷேகத்திலிருந்து அலங்காரத் திருவிழா நடைபெறுகின்றது. கும்பாபிடேக தினமான ஆனி மாத திருவோண நட்சத்திரத்தை முதலாகக் கொண்டு 11 தினங்கள் பக்திபூர்வமாக இடம்பெறும். முதலாம் நாளில் 1008 சங்காபிஷேகமும் மகேஸ்வர பூசையும் சிறப்பானவை. கார்த்திகையன்று சண்முகருக்கு விஷேட அபிடேகம், சண்முகார்ச்சனை என்பன நிகழ்ந்து சண்முகர் அருள் நடனம், தேர் உற்சவம் இடம்பெறும். இறுதி நாளில் ஸ்நபன அபிஷேகம், விஷேட பூசை, ஊஞ்சல் என்பன நடைபெற்று கடம்ப மர நிழலில் முத்துக்குமாரசுவாமி வீற்றிருந்து தீர்த்தம் ஆடுவார். ஈற்றில் மகேஸ்வர பூசையுடன் நிறைவடையும். அடுத்த நாள் வைரவர் பொங்கல் இடம்பெறும்.

#### ஆவணிச்சதுர்த்தி

ஆவணி மாத சதுர்த்தி திதியிலே விநாயகப்பெருமானுக்கு ருத்திர அபிஷேகம், விஷேட பூசை என்பன நடைபெற்று விநாயகர் திருவீதியுலா வந்தருளுவார்.

#### கந்தபுராணபடனம் ஆரம்பம்

ஆவணிப்பூரணை நன்நாளில் விஷேட அபிடேகம் பூசையுடன் கந்தபுராண படனம் ஆரம்பமாகும். தொடர்ந்து ஏறத்தாழ 3 மாதங்களுக்கு தினமும் காலையில் கந்தபுராணபடனம் நடைபெறும். இவ்வாலயத்தின் தனிச்சிறப்பாக விளங்கியது கந்தபுராணம் முழுவதும் ஏட்டுச்சுவடியில் எழுதி பேணப்பட்டமை ஆகும். இக்கந்தபுராண ஏட்டுச் சுவடியை வைப்பதற்கு புத்தக வடிவில் ஒரு மரப் பெட்டியும், இதனைத் தாங்க அறுகோணவடிவில் அமைந்த ஒரு பீடமும் செய்து வைக்கப்பட்டு

இருந்தது. இவ் ஏட்டுப்பிரதிக்குத் தினமும் இருநேரப் பூசை நிகழ்த்தப்பட்டு வந்தது. போர்க்காலத்தில் இவ்வேடு சிதைவுற்றமை எமது தவக்குறைவாகும்.

**நவராத்திரி**

புரட்டாதி மாத பூர்வபட்ச பிரதமை முதலாக நவமி வரை நவராத்திரி விரதம் அநுஷ்டிக்கப்படும். முதலாம் நாட் காலையில் நவராத்திரி கும்பங்கள் (9) வைக்கப்படும். 9 நாட்களும் கும்பங்களுக்கு குங்குமத்தினாலே சகஸ்ரநாம அர்ச்சனை நடைபெறும். ஒன்பதாம் நாள் ஓமம் வளர்த்து ஆயுத பூசை இடம்பெறும். அடுத்தநாள் விஜயதசமியன்று அபிஷேகம், விஷேட பூசை, வன்னி வாழை வெட்டுதலாகிய மானம்பூ உற்சவம், ஏடு தொடக்குதல் போன்றன இடம்பெறும்.

**தீபாவளி**

ஐப்பசி மாத அமாவாசையில் வரும் தீபாவளியன்று ஆலயத்தில் உள்ள அனைத்து மூர்த்தங்களுக்கும் புதிய பட்டுக்கள் சாத்தப்பட்டு விஷேட பூசை நடைபெறும்.

**கந்தஷஷ்டி**

ஐப்பசி மாத பூர்வபக்க பிரதமை முதல் சஷ்டி ஈறாக உள்ள 6 நாட்களும் கந்தஷஷ்டி விரதகாலமாகும். 6 நாட்களிலும் காலையில் கந்தபுராணம் – சூரபன்மன் வதைப்படலம் படிக்கப்படும். மாலையில் ஸ்நபன அபிஷேகம், விஷேட பூசை என்பன நடைபெற்று அருள்மிகு முத்துக்குமாரசுவாமி திருவீதியுலா வந்தருளுவார். 6ம் நாள் – சஷ்டியன்று காலையில் சஷ்டி அபிஷேகம் விஷேடபூசை என்பன நடைபெற்று கந்தபுராண படனத்துடன் நிறைவடையும். மாலையில் சண்முகப்பெருமான் ஆட்டுக்கடா வாகனத்தில் எழுந்தருளி சூரசங்காரம் செய்வார். தொடர்ந்து சண்முகருக்கு விஷேட அபிஷேகம், பூசைகள், சண்முகார்ச்சனை என்பன நடைபெறும். 7ம் காலையில் பாரணை அபிஷேகம், விஷேட பூசை, ஊஞ்சல் என்பன நடைபெற்று தீர்த்தக் கிணற்றடிக்கு எழுந்தருளிய முத்துக்குமாரசுவாமி கடம்பமர நிழலில் வீற்றிருந்து தீர்த்தம் ஆடுவார். அடுத்து மகேஸ்வர பூசை நடைபெறும். தொடர்ந்து கந்தபுராணம் – தெய்வானையம்மன் திருமணப் படலம் படிக்கப்படும். மாலையில் ஸ்நபன அபிஷேகம், விஷேட பூசை, திருக்கல்யாணம், ஊஞ்சல் என்பன நடைபெற்று வள்ளி தெய்வானை சமேத ஆறுமுகசாமி அழகிய பூந்தண்டிகையில் வீதிவலம் வருவார்.

**கந்தபுராணபடன பூர்த்தி**

ஆவணிப்பூரணை நன்நாளில் ஆரம்பமான கந்தபுராணபடனம் கந்தசஷ்டி முடிவின்பின் வரும் பூரணையை ஒட்டிய சுபநாளில் பூர்த்தி செய்யப்படும். ஸ்நபன அபிஷேகம், விஷேட பூசை, ஊஞ்சல், புராணபடன பூர்த்தி என்பன நடைபெற்று அருள்மிகு விநாயகர், முத்துக்குமாரசுவாமி, வள்ளி, தெய்வானை சமேத

முத்துக்குமாரசுவாமி, திருவீதியுலா வந்தருளுவார். நிறைவாக மகேஸ்வர பூசை நடைபெறும்.

**திருக்கார்த்திகை**

கார்த்திகை மாத கார்த்திகை நட்சத்திரத்தில் ஸ்நபன அபிஷேகம், விஷேட பூசை என்பன நடைபெற்று அருள்மிகு முத்துக்குமாரசுவாமி எழுந்தருளி சொக்கபானை எரித்து திருவீதியுா வந்தருளுவர்.

**திருவெம்பாவையும் திருவாதிரையும்**

மார்கழித் திருவாதிரையை ஈறாக உடைய பத்து நாட்களிலும் அதிகாலையில் திருப்பள்ளியெழுச்சி படிக்கப்பட்டு விஷேட பூசைகளுடன் திருவெம்பாவை ஓதப்படும். தொடர்ந்து திருவாதவூரடிகள் புராணபடனம் நடைபெறும். திருவாதிரையன்று விசேட அபிஷேகம் பூசையுடன் ஊஞ்சல் நடைபெற்று திருவாதவூரடிகள் புராணபடனம் பூர்த்தியாக்கப்பட்டு தீர்த்தக்கிணற்றடிக்கு எழுந்தருளிய முத்துக்குமாரசுவாமி கடம்ப மரநிழலில் வீற்றிருந்து தீர்த்தம் ஆடுவார்.

**விநாயகஷஷ்டி**

மார்கழி மாத பூர்வபக்க ஷஷ்டி திதியில் விநாயகருக்கு ருத்திர அபிஷேகம், விஷேட பூசை என்பன நடைபெற்று பிள்ளையார் கதை படிக்கப்பட்டு விநாயகர் திருவீதியுலா வந்தருளுவார்.

**வெள்ளிக்கிழமை**

பிரதி வெள்ளி தோறும் விஷேட பூசை நடைபெற்று வள்ளி, தெய்வானை சமேத முத்துக்குமாரசுவாமி, பஜனையுடன் திருவீதியுலா வந்தருளுவார்.

**கார்த்திகை**

பிரதி கார்த்திகை தோறும் அபிஷேகம், விஷேட பூசை நடைபெற்று வள்ளி, தெய்வானை சமேத முத்துக்குமாரசுவாமி, பஜனையுடன் திருவீதியுலா வந்தருளுவார்.

இவ்வாறான அருட்பொழிவுள்ள ஆலயத்தில் குருநாதப் பெருமானுக்கு கோபுரம் நிர்மாணித்து மகோற்சவம் நிகழ்த்தி அவனது அருளாசியைப் பெறவேண்டும் என்பதே குகனடியார்களின் பெருவிருப்பாகும்.

உ
அம்பாள் துணை



அன்னை சிவத்தமிழ்ச்செல்வி, துர்க்கா துரந்தரி, பண்டிதை,

## கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்

[முன்னாள் பெருந்தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்]

# பத்தாவது ஆண்டு குருபூசை வைபவம்

காலம் : 24-06-2018 ஞாயிற்றுக்கிழமை

நேரம் : காலை 09-00 மணி

இடம் : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

தலைவர் : செஞ்சொற்செல்வர்,

கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்

(தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

**அன்புடையீர்,**

வணக்கம், எங்கள் தேவஸ்தானத்தின் பெருந் தலைவராகவும், உலகம் போற்றும் ஆன்மீக அன்னையாகவும் விளங்கிய தாயாரின் பத்தாவது குருபூசை வைபவம் ஆனிமாத விசாக நன்நாளில் எமது தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது. இவ் வைபவத்தில் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிப்பதுடன் அன்னையின் குருபூசையைத் தொடர்ந்து நடைபெறும் மகேஸ்வர பூசையிலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

## நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| காலை 09.00 மணி | ஆலயத்தில் விஷேட பூஜை, அன்னையின் நினைவாலயத்தில் வழிபாடு. |
| காலை 09.20 மணி | அன்னையின் உருவச்சிலை வழிபாடு. |
| காலை 09.30 மணி | திருமுறை மடத்தில் விஷேட பூசை, வழிபாடு, திருமுறை பாராயணம் [துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகள்] |
| காலை 09.40 மணி | அன்னபூரணி மண்டபத்தில் சிறப்பு நிகழ்ச்சிகள் ஆரம்பம் |
| காலை 09.45 மணி | வரவேற்புரை<br>திரு.சு.ஏழூர்நாயகம் அவர்கள்<br>(உப-தனாதிகாரி, ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்) |
| பண்ணிசை அரங்கம் : | **திருமதி ஜீவந்தினி லம்போதரன் அவர்கள்**<br>( இசையாசிரியர், வேலணை மத்திய கல்லூரி) |
| பிரார்த்தனையுரை : | சிவஸ்ரீ சு.செந்தில்ராஜக் குருக்கள்<br>(பிரதமகுரு, ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்)<br><br>சிவஸ்ரீ.இ. சுந்தரேஸ்வரக்குருக்கள்<br>(ஆதீனகர்த்தா, சுந்தர ஆஞ்சநேயர் தேவஸ்தானம்)<br><br>ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்<br>(முதல்வர், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்) |

வாழ்த்துரை

**வைத்தியநிபுணர் வை. மனோமோகன் அவர்கள்**
( அவுஸ்ரேலியா )

**திரு. ச. சிவஸ்ரீ அவர்கள்**
( பிரதேச செயலர், வலி வடக்கு )

10.30 மணி
தலைமையுரை :

**கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்**
( தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்)

## மூத்த சிவாச்சாரியார்களை கௌரவித்தல்

**விருதுபெறும் மூத்தசிவாச்சாரியார்கள்**

**சிவஸ்ரீ. பஞ்சாட்சரக்குருக்கள்**
**சச்சிதானந்தக் குருக்கள்**
( ஆதீனகர்த்தா, குமாரபுரம் ஸ்ரீ சித்ரவேலாயுத சுவாமி கோவில், தண்ணீரூற்று )

**சிவஸ்ரீ. செவ்வந்திநாத ஐயா பரமானந்த குருக்கள்**
( சாவகச்சேரி )

மு.ப. 11.00 மணி

**திருமுறை வெளியீடு**
**பன்னிரண்டாம் திருமுறை**
**திருத்தொண்டர் புராணம் (நான்காம் பாகம்)**

வெளியீட்டுரை :

**பேராசிரியர் [திருமதி] மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள்**
( ஆய்வுப் பேராசிரியர், கச்சுயின் பல்கலைக்கழகம், யப்பான் )

முதற்பிரதி பெறுபவர் :

**தேசகீர்த்தி திரு.ச.ஆறுமுகநாதன் அவர்கள்**
(உப தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்)

மு.பகல் 11.55 மணி
நன்றியுரை :

**திரு. சி. அருளானந்தசிவம் அவர்கள்**
( உபதலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் )

மதியம் 12.00 மணி

**அன்னதானம்**

**நிர்வாக சபை**

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
தெல்லிப்பழை. 10-06-2018

# கௌரவம் பெறும் மூத்த சிவாச்சாரியார்



## சிவஸ்ரீ பஞ்சாட்சரக் குருக்கள் சச்சிதானந்தக் குருக்கள்

குமாரபுரம் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி தேவஸ்தான ஆதீனகர்த்தர்

முள்ளியவளைப்பதியில் அமைக்கப்பட்ட ஸ்ரீ சித்திர வேலாயுத பெருமாளிற்கு வழிபாடியற்றிவந்த அந்தண சிரேஷ்டர்களின் பரம்பரையில் சாண்டில்யகோத்திரத்தைச் சேர்ந்த அந்தணர் குலத்திலே 1930ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30ம் திகதி பஞ்சாட்சரக் குருக்கள் செல்லம்மா தம்பதியர்க்கு சச்சிதானந்த குருக்கள் இணுவில் வைத்தியசாலையில் பிறந்தார். சிறு வயதிலேயே பெற்றோரை இழந்த குருக்களவர்களுக்கு தமையனார் கனகசபாபதி ஐயர் குருகுலக்கல்வியை வழங்கினார்.

**ஆலய சேவை**

தனது இளமைக் காலத்தில் இலங்கையின் பல பகுதிகளிலும் உதவிக் குருவாகப் பணிபுரிந்துள்ளார். அவற்றில் குறிப்பிடத்தக்கதாக கொழும்பு ஜிந்துப்பிட்டி முருகன் கோவில், கொம்பனித்தெரு முருகன் கோவில் திருக்கேதீஸ்வரம் சிவன் ஆலயம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். திருமணம் முடித்ததும் கரவெட்டி தச்சந்தோப்பு சிந்தாமணி விநாயகராலயத்தில் தனது மாமனாருடன் உதவிக் குருவாகப் பணியாற்றி 1960இல் மாவிட்டபுரத்தில் அவரது ஒன்றுவிட்ட சகோதரரான ஐயாச்சாமிக்குருக்கள் (இராசா குருக்கள்) அவர்களால் ஆச்சார்ய அபிசேகம் செய்துவைக்கப்பட்டு குருப்பட்டம் தரித்து குருக்களாக மேற்படி சிந்தாமணி விநாயகராலயத்தில் 60 ஆண்டுகள் தொடர்ச்சியாகப் பணிபுரிந்திருக்கின்றார். இலங்கையில் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒருசில குருமார்களே தொடர்ந்து 50 ஆண்டுகள் ஒரே கோயிலில் பணிபுரிந்திருக்கிறார்கள். அந்த வகையில் தச்சை ஐங்கரனில் வைத்த பக்தியினாலும், ஊர் மக்களின் அபிமானத்துடனும் 60 ஆண்டுகள் பணியாற்றி இவ்வூர் மக்களால் “சின்னையா” என அன்புடன் அழைக்கப்படலானார். நான்கு தலைமுறை மக்களால் நன்கு அறியப்பட்ட ஐயா அவர்கள் கரவெட்டி மக்களின் திருமணங்களையும் நடாத்தி ஆசி வழங்கியுள்ளார்.

# கௌரவம் பெறும் மூத்த சிவாச்சாரியார்



சிவாகமகிரியா ஞானபூபதி

## சிவஸ்ரீ செவ்வந்திநாத ஐயர் பரமானந்தக் குருக்கள்

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவஸ்ரீ பரமானந்தக் குருக்கள் அவர்கள் 22-09-1939இல் சிவஸ்ரீ செவ்வந்திநாத ஐயர் ஜானகி அம்மா தம்பதியர்க்கு மகனாகப் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலையிலும் தொடர்ந்து கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் 1956இல் கல்விப்பொதுத்தராதரப் பரீட்சைக்கும், 1958இல் கல்வி உயர்தரப் பரீட்சைக்கும் தோற்றினார்.

கோப்பாய் பிரம்மஸ்ரீ சீனிவாசக சாஸ்திரிகளிடம் சமஸ்கிருதக் கல்வியையும் கோண்டாவில் பிரம்மஸ்ரீ நாராயண சாஸ்திரிகளிடம் குருகுலக் கல்வியையும் பெற்றுக்கொண்டார்.

1972 தை 18இல் ஆச்சார்யாபிஷேகம் செய்யப்பட்டு சிவாச்சாரியராக குருத்துவப் பணியை மேற்கொண்டார். இவர் பிரதம குருவாக இரண்டு நவகுண்ட பக்ஷ கும்பாபிஷேகங்களையும், ஐந்து பஞ்சகுண்ட பக்ஷ கும்பாபிஷேகங்களையும், இரண்டு ஏககுண்ட பக்ஷ கும்பாபிஷேகங்களை யும் நடாத்தி வைத்தார்.

மேலும் 33 குண்டம் உட்பட 38 கும்பாபிஷேகங்களில் பங்குபற்றிய பெருமையும் இவருக்குண்டு. மேலும் துவஜாரோகண பிரதமகுருவாகவும் பல ஆலயங்களில் பணியாற்றியுள்ளார்.

அராலி மேற்கு நாகபூசணியம்மை, அராலி வடக்கு முருகமூர்த்தி கோவில், இரத்தினபுரி சிவன் தேவஸ்தானம், வயாவிளான் மானம்பிராய் பிள்ளையார் கோவில், சாவகச்சேரி அப்பச்சிமாவடிப் பிள்ளையார் கோவில் முதலியவற்றில் 1958 - 2000 ஆண்டு வரையான காலப்பகுதியில் நித்திய பூஜை பிரதமகுருவாகப் பணியாற்றியுள்ளார். இவரது குருத்துவப் பணி இற்றைவரை தொடர்கின்றது. இவ்வாறாக நான்கு தசாப்தங்களாக குருத்துவப் பணியாற்றிவரும் சிவஸ்ரீ பரமானந்தக் குருக்கள் ஐயா அவர்களுக்கு அன்னை சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பத்தாவது குருபூசைத் தினமான இன்று மூத்தசிவாச்சாரியார் விருது வழங்கிப் பணிகின்றோம்.

துர்க்காதேவி தேவஸ்தானத்தில் நடைபெற்ற
திருத்தொண்டர் புராணப்படிப்பில் பங்குபற்றியவர்கள்
பூர்த்தி நாளில் கௌரவிக்கப்பட்டனர்.







**கீரிமலை நகுலேஸ்வரர் திருக்கோவிலில்**
**இராஜகோபுர கும்பாபிஷேகம்**
**01-07-2018 ஞாயிறு காலை 9.12 மணி**

Print Master. T.P. 021-205 3322